Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

SATURDAY, JANUARY 22, 2022

சனிக்கிழமை ஜனவரி 22, 2022 | ஒளி: 07 கதிர்: 212 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE

## மகனை தேடிய தாய் மரணம்



■ க. அகரன்

காணாமற்போன தனது மகனைத் தேடிவந்த வவுனியா, கல்மடு பகுதியை சேர்ந்த கருப்பையா ராமாய் (வயது 78) சுகவீனமடைந்த நிலையில், நேற்று (21) மரணமடைந்துள்ளார்.

தொடர்ச்சி P2

சர்வதேச நாணய நிதியம்

# பூச்சாண்டி அல்ல



### தள்ளுவண்டிகளுக்கும் தட்டுப்பாடு ஏற்படப் போகிறது

### அரசியல் ரீதியான தீர்மானங்களை எடுக்க வேண்டாமென அறிவுரை

பொருளாதார நெருக்கடியில் இருந்து நாடு மீள வேண்டுமாயின், சர்வதேச நாணய நிதியத்தை நாட வேண்டும். அதுவே சிறந்த வழியாகுமென அரசாங்கத்துக்கு அறிவுரை வழங்கிய ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் எம்.பியுமான ரவூப் ஹக்கீம், சர்வதேச நாணய நிதியம் ஒன்றும் பூச்சாண்டி அல்ல. அதேபோல் அரசியல் ரீதியிலான தீர்மானம் எடுக்கவும் மாட்டார்கள் என்றார்.

தொடர்ச்சி P2

## கலைஞர்களுக்கு எம்மால் வழங்கக்கூடிய சிறந்த பரிசாகும்

இலவசமாக வழங்கப்படும் மருத்துவ உதவி விபத்துக் காப்புறுதியானது கலைஞர்களுக்கு எம்மால் வழங்கக்கூடிய சிறந்த பரிசாகும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். கலைஞர்களுக்கான காப்புறுதி பத்திரம் வழங்கல், தேசிய மரபுரிமைகள், அரங்குக் கலைகள் மற்றும் கிராமியக் கலைகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் www.heritage.gov.lk உத்தியோகப்பூர்வ இணையத்தளம் மற்றும் கலைஞர்களுக்கான தரவுத்தளம் வெளியீட்டு விழா அலரி மாளிகையில் நேற்று முன்தினம் (20) நடைபெற்றது.




அந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2



பிரியந்த குமார விவகாரம்:

## வீடியோவை பதிவேற்றிய நபருக்கு கடூழிய சிறை

### பாக். உயர்ஸ்தானிகராலயத்தில் அஞ்சலி

இலங்கை பொறியியலாளரான பிரியந்த குமார, பாகிஸ்தானின் சியல்கோர்ட் பகுதியில் வைத்து கொடூரமாக தாக்கி, எரியூட்டி படுகொலை செய்யப்பட்டார்.

இந்தப் படுகொலைக்கு ஆதரவாக சமூக வலைத்தளங்களில் வீடியோவை பதிவேற்றம் செய்த நபருக்கு ஓராண்டு கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## மெல்லவும் விழுங்கவும் முடியாமல் தவிக்கும் ஊழல் நிறைந்த அரசாங்கம்

### எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

நாட்டிலுள்ள விவசாயிகளை விட வெளிநாட்டில் உள்ள விவசாயிகள் இந்த அரசாங்கத்துக்கு முக்கியமானவர்களாக ஆகிவிட்டனர். இன்று அரசாங்கம் மக்களிடம் பணம் பறித்து, கப்பம் பெறும் நிலைக்கு வந்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் எண்ணக்கருவின் அடிப்படையில்

தொடர்ச்சி P2

## இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை கண்டித்து காரைநகரில் போராட்டம்



இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை கண்டித்தும் அவற்றைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோரியும், காரைநகரில் நேற்று (21) போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

காரைநகர் பிரதேச கடற்றொழிலாளர்கள் கூட்டுறவு சங்கமும் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் சம்மேளனமும் இணைந்து இந்தப் போராட்டத்தை காரைநகர் பிரதேச சபையின் முன்பாக நடத்திய மீனவர்கள், அங்கிருந்து பிரதேச செயலகம் வரையில் பேரணியாகச் சென்றனர்.

அங்கு, ஜனாதிபதி மற்றும் கடற்றொழில் அமைச்சர் ஆகியோருக்கு அனுப்புமாறு மகஜரையும் கையளித்திருந்தனர்.

தொடர்ச்சி P2

கடைப்பிடிக்காமலே நடந்தது

## கரைதுறைப்பற்று பிரதேச சபை



■ விஜயரத்தினம் சரவணன்

முல்லைத்தீவு, கரைதுறைப்பற்று பிரதேச சபையின் 44 ஆவது சபை அமர்வு நேற்று (21) நடைபெற்றது. அந்த அமர்வு கொவிட் - 19 சுகாதார வழிகாட்டல்கள், பின்பற்றப்படாமலே முன்னெடுக்கப்பட்டிருந்தது. எனினும், அச்சபையில் உறுப்பினர்கள் ஓரிருவர் மாத்திரமே முறையான விதத்தில் முகக் கவசங்களை அணிந்திருந்தனர். இன்னும் சிலர், முறையற்ற விதத்திலே முகக்கவசங்களை அணிந்திருந்தனர்.

தொடர்ச்சி P2

## மனித எச்சம் மீட்பு: மூவர் கைது

■ செ.கீதாஞ்சன்

முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நாவல் காட்டு கிராமத்தில் பாழடைந்த கிணற்றிலிருந்து 2020 டிசெம்பர் 30 ஆம் திகதியன்று மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன.

அந்த எச்சங்கள் தொடர்பிலான விசாரணைகளை, முள்ளியவளை பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி எம்.

தொடர்ச்சி P2

## பேரனைக் கண்டுப்பிடித்து தருமாறு பாட்டி உருக்கமான வேண்டுகோள்

■ ஆர்.ஜெயஸ்ரீராம்





21 வயது நிரம்பிய தனது பேரனைக் கண்டுபிடித்துத் தருமாறு, அவருடைய பாட்டி, உருக்கமான வேண்டுகோளை விடுத்துள்ளார்.

திருகோணமலை மாவட்டம் ஈச்சிலம்பற்று பிரதேச செயலகப் பிரிவிலுள்ள சூர நகர் கிராமத்தைச் சேர்ந்த ஆறுமுகம் தர்மவதி (வயது 72) பாட்டியே உணவு, உறக்கமின்றி தனது பேரனைத் தேடி அழுது புலம்புகிறார்.

தொடர்ச்சி P2



## குத்துச்சண்டை வீராங்கனைக்கு அமோக வரவேற்பு

■ சண்முகம் தவசீலன்

குத்துச்சண்டை போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற கணேஸ் இந்துகாதேவிக்கு வவுனியாவிலும் மாங்குளத்திலும் அமோக வரவேற்பளிக்கப்பட்டது.

பாகிஸ்தான் லாகூரில் இடம்பெற்ற பாகிஸ்தான் மற்றும் இலங்கைக்கு இடையில் 2 ஆவது சவேட் குத்துச்சண்டை சம்பியன்ஷிப் போட்டி 2022 ஜனவரி 18ஆம் திகதியன்று நடைபெற்றது.

25 வயதுக்கு உட்பட்ட 50/55 கிலோ கிராம் எடைப்பிரிவின் இடம்பெற்ற குத்துச்சண்டை போட்டியில் கணேஸ் இந்துகாதேவி, தங்கப் பதக்கம் வென்று முல்லைத்தீவு மாவட்டத்துக்கும் நாட்டுக்கும் பெருமை தேடித் தந்தார்.

தொடர்ச்சி P2

## எழுத்தாணை மனுத்தாக்கல்



அரசியல் பழிவாங்கல் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவால் தமக்கு எதிராக முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளை வலுவிழக்கச் செய்யுமாறு கோரி குற்றப்புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர, எழுத்தாணை மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

தொடர்ச்சி P2



## போஷாக்கு மட்டம் தொடர்பில் ஆய்வு

இலங்கையில் சிறுவர்கள் மற்றும் பெரியவர்களின் போஷாக்கு மட்டம் தொடர்பில் நாடளாவிய ரீதியில், உலக சுகாதார ஸ்தாபனம், UNICEF மற்றும் சுகாதார அமைச்சு ஆகியன இணைந்து ஆய்வு செய்கின்றன.

தொடர்ச்சி P2

ராஜகிரிய விபத்து விவகாரம்:

## சம்பிக்கவுக்கு எதிரான வழக்கில் மேலதிக சாட்சி விசாரணை



ராஜகிரிய விபத்து தொடர்பில் முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க உள்ளிட்ட மூவருக்கு எதிரான வழக்கின் மேலதிக சாட்சி விசாரணையை பெப்ரவரி 18 ஆம் திகதி மீண்டும் எடுத்துக் கொள்ள கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று (21) உத்தரவிட்டுள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# பூச்சாண்டி அல்ல

"இலங்கைக்கு இப்போது எது தேவையோ அதனையே சர்வதேச நாணய நிதியம் முன்வைக்கும். அவர்களின் உதவிகளை பெற்றுக்கொள்வதன் மூலமாக எம்மால் படுகுழியில் விழுவதில் இருந்து மீள முடியும்" என்றும் ஆலோசனை வழங்கினார்.

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை தொடர்பில் பாராளுமன்றத்தில் நேற்று (21) நடைபெற்ற சபை ஒத்திவைப்புவேளை மூன்றாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு ஹக்கீம் ஆலோசனை வழங்கினார்.

நாடு நிதி நெருக்கடிக்குள் தள்ளப்பட்டு பண வீக்கம் ஏற்படும் நிலை ஏற்படுவதுடன் பணத்தை அச்சடித்து கொண்டு செல்ல தள்ளுவண்டிகளே அவசியப்படும் நிலையொன்று ஏற்படும் என்றும் தெரிவித்த ஹக்கீம், அதுமட்டுமல்ல நாடு வங்குரோத்து நிலைக்கு தள்ளப்படும். நாடு இன்று எதிர்கொண்டுள்ள வீழ்ச்சிக்கு அரசாங்கத்தின் தீர்மானம் மற்றும் செயற்பாடுகளே காரணமாகும் என்றார்.

நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமையில் இருந்து நாம் எவ்வாறு வெளிவரப்போகின்றோம் என்பது குறித்து ஜனாதிபதியின் கொள்கை விளக்கவுரையில் எங்கேயும் கூறவில்லை எனக் குற்றஞ்சாட்டிய ஹக்கீம், எப்போது நாட்டில் மின்சார தட்டுப்பாடு ஏற்படும் என்பதே சகல குடும்பங்களும் கேட்கும் கேள்வியாகும் என்றார்.

அதேபோல் எரிவாயு வெடிப்பு எப்போது சரிசெய்யப்படும், மருந்து தட்டுப்பாடு, உணவு தட்டுப்பாடு, பொருளாதார நெருக்கடிக்கு என்ன தீர்வு என்பதே சகலரதும் கேள்வியாகும். நாடு மிக விரைவில் வங்குரோத்து நிலைக்கு தள்ளப்படப்போகின்றது. அதில் எந்த சந்தேகமும் இல்லை என்றும் தெரிவித்த ஹக்கீம், சகல செயற்பாடுகளும் முடக்கப்படும் நிலை ஏற்படும். அதுமட்டுமல்ல தள்ளுவண்டிக்கு கூட தட்டுப்பாடு ஏற்படப்போகின்றது. ஏனென்றால் நாட்டில் அச்சடிக்கும் ரூபாயைக் கொண்டு செல்ல தள்ளுவண்டிகளே அவசியப்படும் நிலையொன்று ஏற்படும் என்றார்.

தற்போதைய நெருக்கடி நிலைமையில் இருந்து நாட்டை மீட்டெடுக்க சரியான தீர்மானம் எடுத்தாக வேண்டும். ஆனால் நாளுக்கு நாள் அரசாங்கம் எடுக்கும் தீர்மானம் அவர்களின் அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு அமையவே எடுக்கப்படுகின்றது. அரசாங்கம் இப்போது வரையில் எடுத்துள்ள தீர்மானங்கள் அனைத்துமே தீங்கானவையாகவே அமைந்துள்ளன என்றார்.

முறையான ஆலோசனைகளை பெற்று நாட்டின் உண்மையான பிரச்சினைகளை தீர்க்கும் விதமாக அமையவில்லை. அதன் விளைவாக வெளிநாட்டு கையிருப்பு இல்லாமற் போயுள்ளது. இதனால் உணவு தட்டுப்பாடு, மருந்து தட்டுப்பாடு, பண வீக்கம், அதற்காக பணத்தை அதிகமாக அச்சடிக்க வேண்டிய நிலை, எரிவாயு தட்டுப்பாடு இவ்வாறு பல்வேறு காரணிகளை சுட்டிக்காட்ட முடியும். அரசாங்கம், தனது தீர்மானம் எடுக்கும் தரப்பினர் விடும் தவறுகளே, இந்த நிலைமைக்கு காரணமாகும் என்றார்.

இந்த நிலையில் சர்வதேச தொற்றுநோயை ஒரு சாட்டாக இந்த அரசாங்கம் கையில் எடுத்துக்கொண்டுள்ளது. கொரோனா வைரஸ் இலங்கைக்கு மட்டுமே தாக்கத்தை செலுத்தவில்லை. ஏனைய பல நாடுகளும் இதற்கு முகங்கொடுத்தாலும் அவர்கள் வெகுவாக இந்த சவால்களில் இருந்து மீண்டுள்ளனர். நாம் அவ்வாறு அல்ல, நாளுக்கு நாள் வீழ்ச்சி கண்டுள்ளோம் என்றார்.

இதற்கு கட்டமைக்கப்பட்ட தீர்மானங்கள் இல்லாதமையே பிரதான காரணமாகும். ஆகவே எமது நாடு இன்று எதிர்கொள்ளும் வீழ்ச்சிக்கு அரசாங்கத்தின் தீர்மானம் மற்றும் செயற்பாடுகளே காரணமாகும். அதிலிருந்து மீண்டெழ வேண்டுமாயின் சர்வதேச நாணய நிதியத்தை நாடவேண்டியதே ஒரே வழியாகும் என்றார்.

# மகனைத் தேடிய...

இவரது வளர்ப்பு மகனான ரா.இந்திரபாலன் (வயது 38) கடந்த 2007 ஆம் ஆண்டு வவுனியாவில் வைத்து வெள்ளைவானில் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டிருந்தார்.

அவ்வாறு காணாமலாக்கப்பட்ட உறவினர்களைத் தேடி வடக்கு, கிழக்கில் போராட்டங்களும், ஆர்ப்பாட்டங்களும் உணவுத்தவிர்ப்பு போராட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளன.

வவுனியாவில் 1799 நாள்களாக முன்னெடுக்கப்பட்டு வரும் சுழற்சிமுறையிலான உணவு தவிர்ப்பு போராட்டத்திலும் கருப்பையா ராமாய் என்ற தாய் கலந்து கொண்டு தனது மகனை கண்டுபிடித்து தருமாறு வலியுறுத்தி போராடியிருந்தார்.

இந்நிலையில் மகனை காணாமலேயே அவர், நேற்று (21) மரணமடைந்துள்ளார்.

# கலைஞர்களுக்கு...

சொஃப்ட்லொஜிக் காப்புறுதி நிறுவனத்தால் வழங்கப்படும் 50 காப்புறுதி பத்திரங்கள் கலைஞர்களுக்கு குறியீட்டு ரீதியாக வழங்கிவைக்கப்பட்டது.

நிகழ்வில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தொடர்ந்து உரையாற்றுகையில்,

கலாசார பாரம்பரியம் நிறைந்த பெருமைமிக்க வரலாற்றை நமது நாடு கொண்டுள்ளது. உங்களைப் போன்ற கலைஞர்களின் படைப்புகளால் இந்த வரலாறு வண்ணமயமானது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. ஒரு தேசமாக நாம் இன்னும் உலகின் முன் ஒரு சிறந்த கலாசாரத்திற்கு உரிமை கோரும் ஒரு தேசமாகும் என்றார்.

இலக்கியம், நடனம், நாடகம், கலை, பொம்மலாட்டம், சிற்பம், இசை, சினிமா ஆகியவற்றின் மூலம் சமூக யதார்த்தத்தை ஆக்கபூர்வமாக மக்களிடம் கொண்டு செல்ல கலைஞர்கள் பெரும் முயற்சி செய்கிறார்கள். அந்த முயற்சியை மக்கள் இன்னும் இரசிக்கிறார்கள் என்றும் அவர் கூறினார்.

நம் நாட்டின் கலைஞர்கள் தங்கள் முழு வாழ்க்கையையும் கலைக்காக அர்ப்பணிக்கிறார்கள். அவர்கள் பணிபுரியும் துறையை மதிக்கிறார்கள். அத்துடன் அன்பு செலுத்துகின்றனர். அவர்கள் தங்கள் பொருளாதாரத்தை விட கலைக்கு மதிப்பளித்தனர் என்றார்.

# வீடியோவை பதிவேற்றிய நபருக்கு கடூழிய சிறை

பாகிஸ்தான் பயங்கரவாதத் தடுப்பு நீதிமன்றில், சந்தேகநபர் குற்றத்தை ஒப்புக்கொண்டார். அதனையடுத்தே, இத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக, 10,000 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது என பாகிஸ்தான் ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, இந்த சம்பவம் தொடர்பில், சந்தேகத்தின் பேரில், கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் நேற்று (21) ஆஜர்படுத்தப்பட்ட 34 பேரின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கொழும்பிலுள்ள பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தில், அஞ்சலி செலுத்தி அனுதாபம் தெரிவிக்கும் நிகழ்வு, நேற்று (21) நடைபெற்றது.

இதில், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, பிரியந்த குமாரவின் மனைவி மற்றும் பிள்ளைகள் பங்கேற்றிருந்தனர்.

# மெல்லவும்...

அமல்படுத்தப்பட்டு வரும் 'சசுநட அருண' வேலைத்திட்டத்தின் கீழ் திஸ்ஸமஹாராம தேர்தல் தொகுதிக்குட்பட்ட பேரகம 4 எல விசுத்தாராம விஹாரையில் நிர்மாணிக்கப்பட்ட அறநெறிப் பாடசாலை கட்டடத்தை நேற்று (21) திறந்துவைத்தார்.

அந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் இன்று தன்னிச்சையாக அதிகரித்துக் கொண்டிருப்பதாகவும் இவை எதற்கும் அரசாங்கம் பொறுப்பல்ல என்பது போல செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,இது மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தவிக்கும் ஊழல் நிறைந்த அரசாங்கம் என்றார்.

இந்தச் சர்வாதிகார ஆட்சியில் ஒட்டுமொத்த விவசாயிகளும் அனாதையாகியுள்ளனர். மக்களை அழிக்கவே இந்த அரசாங்கம் ஆட்சி பீடம் ஏறியுள்ளது என்றார்.

# இந்திய மீனவர்களின்...

அங்கு, ஜனாதிபதி மற்றும் கடற்தொழில் அமைச்சர் ஆகியோருக்கு அனுப்புமாறு மகஜரையும் கையளித்திருந்தனர்.

"இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் கட்டுக்கடங்காமல் செல்வதனால், எமது கடல் வளங்களும் கடல் சூழலும் எமது உபகரணங்கள், வாழ்வாதாரங்கள் என்பன அழிக்கப்படுகிறன. கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக சொல்லொண்ணா, துன்பங்களை அனுபவித்து வருகின்றோம். பல போராட்டங்களை முன்னெடுத்து இருக்கின்றோம். பல தரப்புக்களிடமும் மகஜர்களை கையளித்துள்ளோம். இருந்தும் இன்று வரை எந்த நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை" என போராட்டத்தில் பங்கேற்றிருந்தவர்கள் தெரிவித்தனர்.

> **10 ஆண்டுகளுக்கு மேலாக இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் அழிக்கப்பட்ட எமது தொழில் உபகரணங்களின் மதிப்புகள் பல கோடி ரூபாய். அதற்கான நஷ்ட ஈடுகளைப் பெற்றுத்தர ஆவண செய்ய வேண்டும். அதேவேளை, இந்த வருடத்திற்குள் எமக்கு தீர்வினைப் பெற்று தர சகல தரப்பினர்களும் முயற்சிகளை முன்னெடுத்து, மீனவர்களின் வாழ்வாதாரத்தையும் கடல் வளத்தையும் காத்து, எதிர்கால சந்ததியினரின் கைகளில் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்**

வெளிநாட்டு மீனவர்கள் தடைச்சட்டத்தை கடுமையாக அமல்படுத்த வேண்டும், உள்ளூர் இழுவைமடி தொழில் சட்டத்தை நடைமுறைப்படுத்தல் வேண்டும். கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் அழிக்கப்பட்ட எமது தொழில் உபகரணங்களின் மதிப்புகள் பல கோடி ரூபாய். அதற்கான நஷ்ட ஈடுகளைப் பெற்றுத்தர ஆவண செய்ய வேண்டும் போன்ற கோரிக்கைகளையும் மீனவர்கள் முன்வைத்தனர்.

அதேவேளை, மலர்ந்துள்ள இந்த வருடத்திற்குள் எமக்கு தீர்வினைப் பெற்று தர சகல தரப்பினர்களும் முயற்சிகளை முன்னெடுத்து, மீனவர்களின் வாழ்வாதாரத்தையும் கடல் வளத்தையும் காத்து, எதிர்கால சந்ததியினரின் கைகளில் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரியுள்ளனர்.

# கடைப்பிடிக்காமலே நடந்தது கரைதுறைப்பற்று பிரதேச சபை

தவிசாளர் உட்பட இன்னும் சில உறுப்பினர்கள் முகக்கவசங்களை அணிந்திருக்கவில்லை. தற்போது நாட்டிலே கொவிட்-19 அசாதாரண சூழல் ஏற்பட்டுள்ள நிலையில் சுகாதார மற்றும், பாதுகாப்புத் தரப்பினர் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றுமாறு மக்களுக்கு அறிவுறுத்திவருகின்றனர். இந் நிலையில் முன்மாதிரியாகச் செயற்படவேண்டிய மக்கள் பிரதிநிதிகள், இவ்வாறு சுகாதார வழிமுறையைப் பின்பற்றாது அலட்சியப்போக்குடன் செயற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பேரனை கண்டுப்பிடித்து...

மாணிக்கராசா மதுசாந் வயது (21) என்ற இளைஞன் வறுமை நிலைமை காரணமாக கொழும்பு, வெள்ளவத்தைக்கு தனது உறவினர்களுடன் கூலி வேலைக்காக 09.01.2022 அன்று சென்றுள்ளார்.மன நலம் பாதிக்கப்பட்டவரான இவர், சிகிச்சை பெற்றுவந்துள்ளார். இதனால், ஓரளவுக்கு குணமடைந்துள்ளார்.

பொங்கல் தினத்துக்கு மறுநாளான 15ஆம் திகதியன்று வெளியில் சென்றவர் வீட்டுக்குத் திரும்பவே இல்லை. அவரைத் தேடிய போது, கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் இருந்து 16 ஆம் திகதி இரவு மீட்டுள்ளனர். பின்னர் அவரை இருப்பிடத்திற்கு அழைத்துச் செல்ல ஓட்டோவில் ஏற்றுவதற்கு முயற்சித்தபோது, அங்கிருந்தவர்களை தள்ளிட்டுவிட்டு தப்பியோடிவிட்டார் என அவரை கொழுப்பிற்கு அழைத்துச் சென்றவர்கள் தகவல் தெரிவிக்கின்றனர்.

அவரைத் தேடித் தருமாறு வெள்ளவத்தை, திருகோணமலை, அலி ஓலுவ பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மாணிக்கராசா மதுசாந், இரண்டு வயதாக இருந்த போது, அவரது தாய், நோய்வாய் பட்டு, உயிரிழந்துள்ளார். இதன்போது பேரப்பிள்ளையான மதுசாந்தை அவரது பாட்டியே பாராமரித்து வந்துள்ளார்.

இவரை கண்டவர்கள், 0766794093,0766794093, 0771607517 ஆகிய அலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொள்ளுமாறு உறவினர்கள் கேட்கின்றனர்.

# மனித எச்சம் மீட்பு:...

அன்வர்தீன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேற்கொண்டனர்.

இதனையடுத்து, கொலை குற்றவாளிகளாக இனம் காணப்பட்ட மூவர் நீண்டகாலத்தின் பின்னர் சந்தேகத்தின் பேரில், கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் மூவரும் நேற்றுமுன்தினம் (20) கைதுசெய்யப்பட்டுள்ளனர் என முள்ளியவளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். அவர்களின், உயிரிழந்த நபரின் மனைவியும் அங்குகின்றார். ஏனைய இருவரும் உயிரிழந்தவரின் நண்பர்கள் என விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளனர்.

மூவரில் இருவர், பொன்னகர் பகுதியினை சேர்ந்தவர்கள், மற்றையவர் கேப்பாபிலவினை சேர்ந்தவர் எனத் தெரிவித்த முள்ளியவளை பொலிஸார், அம்மூவரையும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தும் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவித்தனர்.

# குத்துச்சண்டை...

தந்தையை இழந்த நிலையில் தாயின் அரவணைப்பில் வாழ்ந்துவரும் கணேஸ் இந்துகாதேவி, குத்துச்சண்டையில் சாதித்தார். கணேஷ் இந்துகாதேவியுடன் குறித்த போட்டியில் இலங்கை அணி 7 தங்கம் மற்றும் 5 வெள்ளிப்பதக்கங்களை வெற்றிக்கொண்டு சம்பியனாக மகுடம் சூடியது.

இவ்வாறான நிலையில் குறித்த இலங்கை அணி நேற்று முன்தினம் (20) மாலை இலங்கையை வந்தடைந்திருந்தது. முல்லைத்தீவு கணேஸ் இந்துகாதேவி மாங்குளம் கரிப்பட்டமுறிப்பு புதியநகர் கிராமத்திலுள்ள தனது வீட்டுக்கு நேற்று (21) திரும்பினார். வரும் வழியில் அவருக்கு அமோக வரவேற்பளிக்கப்பட்டுள்ளது

கணேஸ் இந்துகாதேவி , பாகிஸ்தான் போட்டியில் கலந்துகொள்ள 10 இலட்சத்து 5,000 ரூபாய் நிதியினை ஏற்பாடு செய்த 'தமிழ் விருட்ஷம்' அமைப்பின் தலைவர் செ.சந்திரகுமாரின் ஏற்பாட்டில் நேற்றுக் காலை வவுனியாவில் வரவேற்பளிக்கப்பட்டது. வவுனியா கந்தசாமி கோவிலில் இடம்பெற்ற விசேட வழிபாடுகளிலும் கணேஸ் இந்துகாதேவி கலந்துகொண்டுள்ளார்

இதனை தொடந்து மாங்குளம் நகருக்கு வருகை தந்த யுவதிக்கு மாங்குளம் மின்னொளி விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில் பாரிய வரவேற்பு பதாகை ஒன்று வைக்கப்பட்டு மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது.

# எழுத்தாணை...

சட்டத்தரணி மஞ்சுள பாலசூரியவின் ஊடாக, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இந்த எழுத்தாணை மனு நேற்று (21) தாக்கல் செய்யப்பட்டது.

# சம்பிக்கவுக்கு எதிரான...

2016ஆம் ஆண்டு இராஜகிரிய பிரதேசத்தில் பாரிய வாகன விபத்தை ஏற்படுத்தியமை, உரிய சாட்சியங்களை மறைத்தமை ஆகிய குற்றச்சாட்டுகள் இவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளது.

இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தமித் தொட்டவத்த முன்னிலையில் நேற்று (21) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. கடந்த 11 ஆம் திகதியன்று வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, குற்றஞ்சாட்டப்பட்டுள்ள, முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, சுகயீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது.

அது தொடர்பிலான வைத்திய அறிக்கை, நேற்று (21) நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அத்துடன், பாட்டலி சம்பிக்க ரணவக்கவும் நேற்றையதினம் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தார்.

இந்த அறிக்கையை ஆராய்ந்த நீதிமன்றம், அதனை வெளியிட்ட வைத்தியரிடம் வாக்குமூலம் பெறுமாறு குற்றப் பிரிவினருக்கு உத்தரவிட்டார்.

# போஷாக்கு மட்டம் தொடர்பில் ஆய்வு

தரவுகளை சேகரிக்கும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொரளை மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது. நாடளாவிய ரீதியில் 2000 வீட்டு அலகுகள் இதற்காக பயன்படுத்தப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் ஊட்டச்சத்து நிலை குறித்த கணக்கெடுப்பு இறுதியாக 2016 ஆம் ஆண்டு நடத்தப்பட்டது.

கொரோனா பரவலுக்கு மத்தியில் பல்வேறு சந்தர்ப்பங்களில் நாடு மூடப்பட்டதுடன், நாட்டு மக்களின் போஷாக்கு நிலை தொடர்பில் அதிக மாற்றம் ஏற்பட்டமை தெரியவந்தது.

நகர மற்றும் தோட்டப்புற வீடுகளில் வாழும் சிறுவர்களினதும் பெரியவர்களினதும் போசாக்கு மட்டம் தொடர்பில் பாரிய மாற்றம் ஏற்பட்டிருந்தமை, சுகாதார அமைச்சினால் இதற்கு முன்னர் நடத்தப்பட்ட ஆய்வுகளில் கண்டறியப்பட்டது.

# மூளைசாலிகளின் வெளியேற்றம்

செல்வராஜ் வினோதன்
நான்காம் வருடம்,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.



உலகமயமாதல், ஒரு நேர்நிலை ஆற்றலாக விளங்குவதாக முன்னாள் ஐக்கிய நாடுகளின் உலகமயமாதல் தொடர்பான ஆலோசகரான ஜகதீசு பகவதி குறிப்பிடுகிறார். உலகமயமாதல் மூலமாக, அளவுக்கு மீறிய விரைவான வளர்ச்சியால், சில வெளிப்படையான பல பிரச்சினைகள் காணப்படுகின்றன.

அவற்றில், முதல் பிரச்சினையாக வணிகச் செயலாக்கப் புறத்திறனீட்டம் குறிப்பிட்ட தாக்கத்தை ஏற்படுத்துகிறது. மேலும் வணிகச் செயலாக்கப் புறத்திறனீட்டம் என்பது, பல்வேறு வணிகச் செயற்பாடுகளுக்காக சேவைகளை வெளிநாடுகளிலிருந்து பெற்றுக்கொள்வதைக் குறிக்கும். இது மலிவான சேவைகளை வழங்குவதற்கு உதவினாலும், சில இடங்களின் சேவைத்துறை வேலை வாய்ப்புகளை வேறிடத்துக்கு மாற்றிவிடுகிறது.

இரண்டாவது பிரச்சினையாக, நுகர்வு என்பது உலகமயமாதலின் விளைவின் பக்கமாக பார்த்தால். 2000க்கும் 2007க்கும் இடையில் அமெரிக்கா மொத்தம் 3.2 மில்லியன் உற்பத்தித்துறைப் பணி வாய்ப்புகளை இழந்துள்ளது. சீனாவின் பொருளாதார வெற்றிகளால், மேற்கு நாடுகளிலும் வளர்ந்துவரும் நாடுகளிலும் வேலை இழப்புகள் ஏற்பட்டுள்ளன. சீன உற்பத்திப் பொருட்கள் பெருமளவில் இறக்குமதி செய்யப்பட்டதால், தென்னாபிரிக்காவில் ஏறத்தாழ 300,000 நெசவாலைத் தொழிலாளர் வேலை இழந்தனர்.

உலகமயமாதலில் அரசியல் வணிகப் பற்றாக்குறை என்பதனை, விளைவு என்ற கோணத்தில் பார்த்தால், இது ஆசியாவை நோக்கிய உலக அதிகாரப் பெயர்ச்சிக்கு வழி வகுத்துள்ளதாகவும் கருத்து உண்டு. குறிப்பாக, சீனா பெரிய சந்தை வளர்ச்சியைப் பெற்றுள்ளது. 2011 ஆம் ஆண்டின் நிலைவரப்படி, 2025 ஆம் ஆண்டில் அமெரிக்காவை முந்தும் நிலையில் சீனா உள்ளது. ஆகவே, இதன் விளைவாக இலங்கை போன்ற மூன்றாம் உலக நாடுகளிலிருந்து மூளைசாலிகள் முதலாளித்துவ நாடுகளுக்கு படையெடுக்கின்றனர் என்ற எதிர்வுகூறல்களும் காணப்படவே செய்கின்றன.

இந்த ஏற்றத்தாழ்வான போட்டிச் சூழலில், உலகமயமாதலின் விளைவுகள் எனும் போது, சாதாரண விடயமாக மூளைசாலிகளின் வெளியேற்றத்தினை கடக்க முடியாது. காரணம் ஒரு பிரஜை தனது சொந்த நாட்டை விட்டு பிரிவதில் நாட்டம் கொள்வது இல்லை. அந்த நிலைக்கு ஒரு நாட்டு பிரஜை தள்ளப்படுவது என்பது முழுப் பொறுப்பும் ஏற்கவேண்டியவர்கள் நாட்டின் ஆட்சியாளர்களே!

அதுவே இன்று இலங்கையின் பேசு பொருளாகவும் உள்ளது. செல்வந்த நாடுகளில் உள்ள வேலை வாய்ப்புகள் வறிய நாடுகளில் உள்ள திறன் பெற்ற தொழிலாளர்களைக் கவருவதால் மூளைசாலிகள் வெளியேற்றம் ஏற்படுகின்றது என்றதொரு காரணத்தினை மட்டும் குறிப்பிட முடியாது.

வளர்ச்சியடைந்த நாடுகளில் வேலைவாய்ப்பினைத்தேடி நாட்டை விட்டு வெளியேறும் கல்விமான்களான இளைஞர்களின் எண்ணிக்கை அதிகரித்துவரும் சம்பவம் தொடர்பாக, பலரும் தங்கள் கவலையை வெளியிட்டுள்ளார்கள். உலகவங்கி அண்மையில் வெளியிட்ட இலங்கை அபிவிருத்தி மேம்படுத்தல் 2019 வெளியீட்டில் உலக வங்கி குறிப்பிடும் போது, இலங்கை தொழிலாளர் சக்தியின் பின்னணியில் விசேடமாக சிக்கல் நிறைந்த ஒரு பிரச்சினையாகக் காணப்படுகிறது. இதற்கு மேலாக, தொழிலாளர்கள் இலங்கைக்கு தங்கள் பங்களிப்பினை வழங்குவது மிகவும் குறைவாகவே உள்ளது. 15 வயதுக்கு மேற்பட்ட தகுதிவாய்ந்த மக்களில் கிட்டத்தட்ட அரைவாசிப்பேர் மட்டுமே தங்கள் சேவையை சந்தைக்கு வழங்குகிறார்கள்.

ஆண் பங்களிப்பாளர்கள் சுமார் 72 சதவீதமாக உள்ள அதேவேளை பெண் பங்களிப்பாளர்கள் மிகவும் குறைவாக அதாவது சுமார் 35 வீதமாக உள்ளனர். அவர்களில், 25 மற்றும் 40 வயதுக்கு இடைப்பட்ட இளைஞர்களே தொழிலாளர்களில் பெரும்பங்கை வகிக்கிறார்கள், அந்த வயதுள்ள குழுக்களே கிட்டத்தட்ட நாட்டின் மொத்த சனத்தொகையினையும் உருவாக்கியுள்ளார்கள். ஆகவே அவர்கள் நாட்டை விட்டு வெளியேறுவது பொருளாதாரத்துக்கு பாரிய இழப்பாகக் கருதப்படுகிறது.

மறுபுறம், வெளிநாட்டில் வேலை செய்பவர்கள், வெளிநாட்டு நாணயங்களில் அனுப்பும் இந்தப் பணம், சொந்த நாட்டின் அந்நியச் செலாவணியை கணிசமான அளவு உயர்த்தி அதன் பற்றாக்குறையை சமன்படுத்த உதவுகிறது என்று சப்பக்கட்டு கட்டப்படுகிறது. ஆனால், இவ்வாறு இளைஞர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு அடிப்படை காரணங்களாக இன்றைய சமகால நிலையினை கொண்டு வரிசைப்படுத்தலாம் அவையாவன:

கல்வித்துறையின் தரம் பற்றிய கேள்வி, நிபுணத்துவமற்ற கொள்கை வகுப்பு, கடன்சுமைகளால் பொருட்களின் விலையுயர்வு, வாழ்வியல், தண்டனைவிலக்கு, கலாசாரம், நீதித்துறை மீதான அரசியல் தலையீடுகள், இலஞ்சம், ஊழல், கனவான்கள் மீதான பக்கச்சரிவு என அடிப்படையான காரணங்களை வரிசைப்படுத்திச் சொல்ல முடியும்.

முதலாவதாக, இலங்கையின் கல்வித்துறையை பொறுத்தமட்டில், இலவசக் கல்வித் திட்டம் எமது நாட்டில் சிறந்த மாற்றங்களை உருவாக்கியது. மக்கள் மத்தியில் கல்விச் செயற்பாடுகள் புத்துணர்வு பெற்றன. படித்தவர்கள் பரம்பரை மேலோங்கியது. நிறையவே புத்திஜீவிகளை எம்மால் உருவாக்கிக் கொள்ள முடிந்தது. இதனை நாம் எப்போதும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

நாட்டின் கல்வி முறைமையின் மூலம் அவர்கள் பெற்ற புலமை நாட்டுக்குப் பயன்பட வேண்டும். அதன் மூலம் நாட்டை வெற்றிப் பாதையில் இட்டுச் செல்ல முடியும். தொழில்நுட்பம் 21ஆம் நூற்றாண்டு அறிவின் நூற்றாண்டாகும். செயற்கை நுண்ணறிவு, ரோபோ, நனோ தொழில்நுட்பம், இணையம், உயிர்த் தொழில்நுட்பம், தன்னியக்கம் போன்ற தொழில்நுட்பத் துறைகள் இனிவரும் சில தசாப்தங்களில் அபிவிருத்தியடைந்த நாடுகளின் பொருளாதார வளர்ச்சியை தீர்மானிக்கும் அம்சங்களாக விளங்கும்.

ஆனால், இலங்கையில் இரண்டாம் நிலைக்கல்வி வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்கு அரச வளங்களின் பற்றாக்குறை தடையாக இருக்கிறது. நாட்டில் உயர்தரம் வாய்ந்த மூன்றாம் நிலைக்கல்வி வாய்ப்புகளை வழங்குவோரின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டியுள்ளது. இந்த இடைவெளியை சீர் செய்ய இலங்கையில் நமது அரசியல்வாதிகள் தனியார் பல்கலைக்கழகங்களை கல்வித்துறைக்குள் உட்புகுத்தி சமநிலையற்ற தன்மையை தோற்றுவிக்கின்றனர்.

மூன்றாவதாக, நாட்டில் இன்று நிலைபெறும் தண்டனை விலக்கு கலாசாரம் மூளைசாலிகளின் வெளியேற்றத்திற்கு காரணம் எனலாம். அவற்றுக்கு சில உதாரணங்களை முன்வைக்க முடியும்.

நீதித்துறை மீதான தலையீடுகளும் அதனை பலவீனப்படுத்த உதிக்கின்ற நகர்வுகளும் ஆபத்தானதே. தண்டனையிலிருந்து தப்பிக்கும் கலாசாரம் ஒரு நாட்டினுடைய சுதந்திரமான நீதித்துறையின் மீதான நம்பிக்கையை கேள்வி கேட்பது போன்றானது.

இவ்வாறான அரசியல் தலையீடுகள் நாட்டு மக்களினுடைய நம்பிக்கையையும் அவர்களின் ஸ்திரத்தன்மையையும் இல்லாது செய்கின்றது. இப்படிப்பட்ட சூழலில் படித்த இளைஞர்கள், சமூக சேவையாளர்கள், ஊடகவியளாலர்கள் என்போர்க்கான பாதுகாப்பு சந்தேகிக்கப்பட வேண்டிய விடயமாகிறது.

ஆகவே மூளைசாலிகளுக்கான பாதுகாப்பு, நியாயம் யாரிடம் பெறுவது? இந்தச் சூழலில் மூளை சாலிகளின் வெளியேற்றம் மற்றும் கடவுச்சீட்டு பெற வரிசையில் நிற்பதென்பது நியாயமானது தானே?

நான்காவது காரணம், உலகிற்கு ஊழல்கள் புதியவை அல்ல. அவை பெரும் அலையாகவும் எழுந்து, ஓரிடத்தில் நிகழும் மாற்றங்களை தவிர அப்படியே ஒய்ந்து போகும்.

ஐந்தாவது காரணம், இலங்கையின் உயர் கல்வி இயந்திரத்தின் மூலம், கணக்காளர்கள், மருத்துவர்கள், பொறியியலாளர்கள், மேலாளர்கள் போன்ற தொழில் நிபுணர்களை பெரிய அளவில் உற்பத்தி செய்கிறது. இந்த அனைத்து வகை உற்பத்தித் தொழிலாளர்களையும் உள்வாங்கும் அளவுக்கு நாட்டின் பொருளாதாரம் போதுமானளவு விரிவடையவில்லை. எனவே நாட்டில் உள்ள படித்த இளைஞர்களிடையே அனைத்து துணைப் பிரிவுகளிலும் வேலையின்மை உயர்ந்த அளவில் உள்ளது. தொழில்களுக்குத் தட்டுப்பாடு, குறைவான ஊதியம்பெறும் நிலை ஏற்படுகிறது.

அத்தகைய தற்காலிகமாக தேவைக்கு அதிகமாக உள்ள ஊழியர்களை ஆட்குறைப்புச் செய்வதற்கு சில வசதிகளை ஏற்படுத்த வேணடியிருக்கும். ஆகவே படித்த கல்வித்துறைக்கான வேலை வாய்ப்புகள் இன்னமும் அரசாங்கத்தால் நிறுவப்படவில்லை. வேலை வாய்ப்புகள் பற்றிய கவனமற்றவர்களாக ஆட்ச்சியாளர்கள் காணப்படுகின்றனர்.

மாறாக, பெருந்தெருக்களையும் உயர்கட்டடங்கள் கட்டுவதும் அதற்காக வெளிநாட்டு ஊழியர்களை வேலைக்கு அமர்த்துவது போன்றவை எந்த விதத்தில் நியாயமானது? எதிர்கால இலக்கின் அரசாங்கத்தின் வியூகம் தான் என்ன? இந்த கேள்விகளின் நீட்சியின் விளைவானது மூளைசாலிகளின் வெளியேற்றமேயாகும்.

ஆறாவது காரணமாக போட்டி உலகிற்கான தொழில்நூட்ப வசதிகள் செய்யப்படாமையாகும். மற்றைய மூலதனப் பிரிவுகளைப் போலவே, தொழிலாளர்களும் ஒரு மனித மூலதனமே. உலகின் அறிவுத் தளம் வேகமாக மாறுதலடைகிறது. இது சிரேஷ்ட தொழிலாளர்கள் மீண்டும் புதியனவற்றைக் கற்றுக்கொள்ளாவிட்டால், நவீன வேலைகளை பூர்த்தி செய்வதற்கு அவர்கள் தகுதியற்றவர்களாகியுள்ளனர்.

தேசத்தின் இலவசக் கல்விக் கொள்கையின் கீழ், பெரும் செலவில் இளைஞர்களுக்கு நாடு கல்வியறிவை வழங்கியுள்ளது. ஆகவே அவர்கள் நாட்டிற்குச் சேவை செய்வதன் மூலம், அதனைத் திருப்பிச் செலுத்த வேண்டும். அவ்வாறு இல்லாது வெளிநாட்டுக்குச் செல்வோர் மீது, தேசப்பற்றற்றவர்களாகப் பார்க்கவும் சித்தரிக்கவும் செய்யும் எம்மவர்கள், தேர்தல் காலங்களில் நிறத்தையும் சின்னத்தையும் பார்த்து வாக்களிக்கும் நாம் கொள்கையை பார்ப்பதில்லையே?அதன் விளைவே இன்று இளைஞர்கள் கடவுச்சீட்டு பெறுவதற்கான வரிசையில் நிற்கிறார்கள்.

'அபிவிருத்தி என்பது கொங்ரீட் காடுகலல்ல; அது, மக்களின் வாழ்வியலோடு இணைய வேண்டும்'.

# சம்பந்தனின் கனவைக் கலைத்த கோட்டாவின் உரை



புருஜோத்தமன் தங்கமயில்



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, செவ்வாய்க்கிழமை (18) பாராளுமன்றத்தை ஆரம்பித்து வைத்து, ஆற்றிய கொள்கை விளக்க உரை பல தரப்பினரிடமும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

நாடு பாரிய பொருளாதார நெருக்கடியில் இருக்கின்ற நிலையில், அதை மீட்டெடுப்பது பற்றிய எந்தவித சிந்தனையோ, திட்டங்களோ இல்லாமல், ஜனாதிபதி தன்னுடைய உரையை ஆற்றியிருப்பதாக எதிர்க்கட்சிகளும் தென் இலங்கை ஊடகங்களும் விமர்சிக்கின்றன.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை, ஜனாதிபதி தனது உரையில் தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினை தொடர்பில் எதுவுமே குறிப்பிடாதது, பாரிய ஏமாற்றத்தை அளித்துள்ளது.

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரைக்காக, இம்முறை தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் இந்தியாவும் காத்திருந்தன. இலங்கை பாரிய பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருக்கின்ற நிலையில், அதை மீட்டெடுக்கும் முயற்சிகளில் இந்தியா அர்ப்பணிப்போடு செயற்பட்டுவருகின்றது. அதன்மூலம், சீனாவுடனான இலங்கையின் நெருக்கத்தை குறைக்க முடியும் என்று இந்தியா நம்புகின்றது. அதன்போக்கிலான இராஜதந்திர ஆட்டத்தை இந்தியா, இலங்கைக்குள் நடத்திக் கொண்டிருக்கின்றது.

ஜனாதிபதியின் உரை ஆற்றப்பட்ட அன்றுதான், பெற்றோலியப் பொருட்கள் கொள்வனவுக்காக இந்தியா 500 மில்லியன் டொலரை இலங்கைக்கு கடனாக வழங்கியது. இலங்கைக்கு வழங்கப்படும் கடன்கள், மீளப் பெற முடியாதவை என்பதை நன்கு உணர்ந்துகொண்டே இந்தியா வழங்குகின்றது. அதற்கு பிரதிபலனாக, சீனாவின் ஆதிக்கத்திலிருந்து இலங்கையைத் தன்னுடைய வளையத்துக்குள் கொண்டுவர முடியும் என்று இந்தியா நினைக்கின்றது. அப்படியான நிலையில், தற்போதைய நெருக்கடி நிலைகளுக்கு உதவும் இந்தியாவைக் குளிர்விக்கும் கருத்துகளை கோட்டா, தன்னுடைய உரையில் வெளிப்படுத்துவார் என்று நம்பியது. ஆனால், கோட்டா அவ்வாறான எந்தவொரு விடயத்தையும் செய்யவில்லை.

மாறாக, தங்களுடைய இராஜதந்திர ஆட்டங்களில், இலங்கையை பலிகடா ஆக்க வேண்டாம் என்ற தொனியை வெளிப்படுத்தினார். இது, உதவிக்கு வந்துள்ள இந்தியாவை எரிச்சலடைய வைத்துள்ளது.

இன்னொரு பக்கம், நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலையை, இந்தியா கையாள ஆரம்பித்திருக்கின்ற நிலையில், இந்தியாவை குளிர்விக்கும் வகையில், கோட்டா ஏதாவது கருத்தை வெளியிடுவார் என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் நினைத்தது. குறிப்பாக, தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கான தீர்வு பற்றி ஏதாவது குறிப்பிடுவார் என்று இரா.சம்பந்தன் நம்பினார்.

ஆனால், தமிழ் மக்களுக்கு அரசியல் உரிமைப் பிரச்சினையென்ற ஒன்று இல்லவே இல்லை என்ற தோரணையிலேயே கோட்டா உரையாற்றினார். இது, சம்பந்தன் உள்ளிட்ட தமிழ்த் தேசிய பாராளுமன்ற உறுப்பினர்களை கோபப்படுத்தியது. இதனால், ஜனாதிபதி வழங்கும் சம்பிரதாய தேநீர் விருந்தைக் கூட, சம்பந்தன் புறக்கணிக்கும் நிலை ஏற்பட்டிருந்தது.

தென் இலங்கை அரசியல்வாதிகளோடு, அரசியல் கொள்கை சார் முரண்பாடுகள் இருந்தாலும், அரசியல் நாகரிகத்தோடு விடயங்களை கையாண்டு வருபவர் சம்பந்தன். மஹிந்த ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்க, சந்திரிகா குமாரதுங்க தொடங்கி, எந்தவோர் அரசியல் தலைவரும் மதிக்குமளவுக்கு தன்னை வைத்துக் கொள்வார். பாராளுமன்ற சம்பிரதாய நிகழ்வுகள் தொடங்கி எல்லாவற்றிலும் கலந்து கொள்வார்.

ஜனாதிபதிகளை அல்லது அரசாங்கங்களை பிடிக்குதோ இல்லையோ, சம்பிரதாய நிகழ்வுகளில் சம்பந்தன் கலந்து கொள்வார். தான் மட்டுமல்லாது, தன்னுடைய கட்சி உறுப்பினர்களையும் பங்கெடுக்க வைப்பார். அதன்மூலம், ஆளுமையும் அனுபவமும் உள்ள தலைவராக தன்னை முன்னிறுத்தி வந்திருக்கிறார். அப்படிப்பட்ட சம்பந்தனே, இம்முறை ஜனாதிபதியின் தேநீர் விருந்தை புறக்கணித்தது மட்டுமல்லாது, பசில் ராஜபக்ஷவிடம் "…. ஜனாதிபதியிடம் சொல்லுங்கள், அவரது இன்றைய கொள்கை விளக்க உரை வெறும் குப்பை…" என்று ஆவேசப்பட்டது எல்லாம் கவனத்தில் கொள்ளத்தக்கது.

தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வொன்றைப் பெற்றுக்கொடுத்த தலைவனாக, தான் என்றைக்கும் நினைவுகூரப்பட வேண்டும் என்பது சம்பந்தனின் நீண்டகாலக் கனவு. அதற்காக அவர் பாரிய விட்டுக்கொடுப்புகளைக்கூட செய்வதற்கு தயாராக இருக்கிறார். கடந்த நல்லாட்சிக் காலத்தில், எதிர்க்கட்சித் தலைவராக அவர் இருந்த போதிலும், எதிர்க்கட்சித் தலைவர் என்கிற நிலை தாண்டி நின்று, அரசின் பங்காளிக் கட்சித் தலைவர் போன்றே செயற்பட்டார்.

அதற்கு, புதிய அரசியலமைப்பொன்றின் மூலம், தமிழ் மக்களுக்கான தீர்வை உறுதி செய்துவிட வேண்டும் என்பது காரணமாகும். அதற்காக அவர், 'ஒன்றையாட்சிக்குள் சமஷ்டி' என்ற வார்த்தை ஜாலங்களை எல்லாம் தமிழ் மக்களை நோக்கிச் செலுத்தினார். குறிப்பாக, புதிய அரசியலமைப்பிலும் பௌத்தத்துக்கு முதலிடம் என்கிற விடயத்தை அங்கீகரிக்கவும் செய்தார்.

அத்தோடு, தமிழ் மக்களிடம் மாத்திரமல்லாது, வெளிநாட்டு இராஜதந்திரிகள், தூதுவர்கள் தொடங்கி பல தரப்பினரிடமும் நல்லாட்சி அரசாங்கம், புதிய அரசியலமைப்பின் ஊடாக தீர்வை வழங்கிவிடும் என்று நம்பிக்கை ஏற்படுத்தினார். 'பொங்கலுக்குள் தீர்வு; தீபாவளிக்குள் தீர்வு' என்று சம்பந்தன் சொன்னதெல்லாம், அப்படிப்பட்ட நிலையில்தான். ஆனால், அவரின் எதிர்பார்ப்பை மைத்திரியும் ரணிலும் பொய்யாக்கிவிட்டனர்.

அவ்வாறான நிலையில்தான், மீண்டும் ராஜபக்ஷர்கள் அதிகாரத்துக்கு வந்தனர். ராஜபக்ஷர்கள் அதிகாரத்துக்கு வந்தது முதல், சம்பந்தன் பெரியளவில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை. அதற்குக் கொரோனா பொருந்தொற்றையும் வயது மூப்பையும் வெளிப்படைக் காரணங்களாகச் சொல்லலாம்.

ஆனால், மறைமுகமாக ராஜபக்ஷர்களுக்கு தென் இலங்கை மக்கள் வழங்கியிருக்கின்ற வெற்றி என்பது பாரியளவானது. அதனை, தாண்டி நின்று ராஜபக்ஷர்கள் என்றைக்கும் சிந்திக்க மாட்டார்கள் என்பதுவும், குறிப்பாக கோட்டாவோடு பேச்சுவார்த்தை நடத்துவது என்பதெல்லாம் இயலாத காரியம் என்பது எல்லாமும் சம்பந்தனை அமைதியாக இருக்க வைத்தது.

ஆனாலும், ஒரு சாக்குக்காக ஜனாதிபதியோடு பேசுவதற்கு சம்பந்தன் நேரம் கேட்டு வைத்தார். அவருக்கு தெரியும் கோட்டாவோ, அவரது 'வியத்கம' அணியோ கூட்டமைப்போடு பேசும் நிலையில் இல்லை. அதனால், பேச்சுவார்த்தைக்கான சந்தர்ப்பம் தவிர்க்கப்படும் என்று.

ஆனாலும், காலம் சம்பந்தனை மீண்டும் சுறுசுறுப்பான அரசியல்வாதியாக மாற்றும் நேரத்தை வழங்கியது. நாடு பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியதும், இந்தியா, அமெரிக்கா வடிவில் அது கனிந்தது. அதன்போக்கில்தான், என்றைக்குமே ராஜபக்ஷர்களை நம்பாத சம்பந்தன், இம்முறை கோட்டாவின் உரைக்காக காத்திருந்தார்.

கடந்த ஆண்டின் இறுதிப் பகுதியில், இந்தியப் பிரதமரை சந்திப்பதற்காக கூட்டமைப்பினர் அழைக்கப்பட்டபோது, ஏதேதோ காரணங்களைச் சொல்லி அந்தச் சந்திப்பை சம்பந்தன் தவிர்த்தார். இதனால், இந்தியாவுக்கு பலத்த அதிருப்தி ஏற்பட்டது. ஆனால், அந்தச் சந்திப்பை சம்பந்தன் தவிர்த்தமைக்கு தென் இலங்கை மக்களிடம் தேவையற்ற அச்சத்தை ஏற்படுத்த வேண்டாம் என்பது காரணமாக இருக்கலாம் என்பது பலரது எதிர்பார்ப்பு.

ஏனெனில், தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு தென் இலங்கை மக்களின் அதிருப்தியைச் சம்பாதித்துக் கொண்டு தீர்வைப் பெற்றுவிட முடியாது என்பது அவரது நீண்டகால எண்ணம். அப்படியான நிலையில், இந்தியாவின் அழைப்பை அவர் தவிர்த்துக் கொண்டதன் மூலம், ராஜபக்ஷர்களும் அவரது ஆதரவாளர்களும் மகிழ்வார்கள் என்று அவர் நினைத்தார். அதன் பிரதிஉபகாரத்தை கோட்டா தன்னுடைய உரையில் வெளிப்படுத்துவார் என்று சம்பந்தன் நம்பினார்.

ஆனால், கோட்டாவின் சிந்தாந்தமோ பௌத்த சிங்கள அடிப்படைவாதத்தினாலும் இராணுவ மனநிலையாலும் வார்க்கப்பட்டது. அதில் அவர் எந்த மாற்றங்களையும் செய்யார். ஜனாதிபதியாக பதவியேற்றதும் இந்தியாவுக்கு சம்பிரதாயபூர்வ விஜயம் மேற்கொண்டிருந்த கோட்டா, அங்கு வைத்தே இலங்கையின் உள்நாட்டு பிரச்சினைகளை, நாங்கள் பார்த்துக் கொள்வோம்; வெளியாரின் தலையீடுகள் அவசியமில்லை என்று சொல்லிவிட்டு வந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அப்படிப்பட்ட நிலையில், பொருளாதார நெருக்கடி நிலை மாத்திரம் அவரது நிலைப்பாடுகளை மாற்றிவிடும் என்று இந்தியாவும், சம்பந்தன் போன்றோரும் நிலைப்பதெல்லாம் வீணானது.

கோட்டாவைப் பொறுத்தவரை, 'இது சிங்கள நாடு; இங்கு வாழும் தமிழ் பேசும் சமூகத்தினர் இரண்டாம் தரப் பிரஜைகள். அவர்களுக்கு அரசியல் பிரச்சினை என்ற ஒன்று இருக்கவே முடியாது' என்பதாகும். இதைத்தான் அவர் மீண்டும் உறுதி செய்திருக்கிறார்.



# கோணமலை மண்ணின் கலைப்படைப்புகள்

## நுண்கலைஞர் எம். சாஜித்தின் கண்காட்சியின் அழகு



அ. அச்சுதன்



கிழக்கில் திருகோணமலை மாவட்டத்தில் திருகோணமலையில் முதன் முறையாக சிற்பம், ஓவியங்கள் சார்ந்ததாக நிகழ்த்தப்பட்ட கலைப்படைப்புகள் கண்காட்சியானது நுண்கலைமாணி பட்டதாரியும் கலைஞருமான எம். சாஜித்தால் அவருக்கு சொந்தமான *Sajith Art Gallery* இன் மூலம், திருகோணமலை நகர சபை மண்டபத்தில் கடந்த 15, 16 திகதிகளில் நிகழ்த்தப்பட்டது.

இச் சாதனைக்கு உரியவரான சாஜித், எம். மஃரூபினதும் மஸாகிதா பேகத்தினதும் மகனாக திருகோணமலை மண்ணில் ஜின்னா நகர் எனும் இடத்தில் பிறந்தார். இவர், சிறுவயதில் இருந்தே ஓவியத்தின் மீது ஆர்வம் உள்ளவராகத் திகழ்ந்தார். ஆரம்பம் முதல் உயர்தரம் வரை தனது கல்வியை திருகோணமலை இ.கி.ச.ஸ்ரீ. கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் கற்றார். இவர் தமக்கு மிகவும் பிடித்தமான பாடம் சித்திரத்தினை உயர்தரத்தில் தொடர முடியாத நிலையில் முதலாம் அமர்வில் சிறந்த பெறுபேற்றை பெற முடியாமல் இருந்த நிலையில், அவருக்கு அப்பாடசாலை ஓவிய ஆசிரியர் அருள் பாஸ்கரன், சித்திர பாடத்தினை உயர்தர இரண்டாம் அமர்வில் கற்றுக் கொடுத்து, சிறந்த பெறுபேற்றைப் பெற்று, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு திருகோணமலை மாவட்டத்தில் இருந்து தெரிவாகி பாடசாலைக்கும் திருகோணமலைக்கும் பெருமை தேடிக் கொடுத்தார்.





இவர், யாழ் பல்கலைக் கழகத்தில் சித்திரமும் வடிவமைப்பும் துறையில் நான்கு வருடங்கள் ஓவியக்கலையை பயின்ற நிலையில் 202ஆம் ஆண்டு ஆடி மாதம் பட்டதாரியாக வெளியாகினார்.

பல்கலைக் கழகத்தில் இருந்து வெளியாகிய நிலையில், அப்படியே நின்று விடாது தன்னுடைய பிறந்த மண்ணில் திருகோணமலையில் தன்னைப் போல் ஓவியம், சிற்பம் போன்ற கலைக்கல்வியை முறையாக கற்க விரும்பும் மாணவர்களுக்கும் கலையின் மீது விருப்பம் கொண்ட அனைவருக்கும் ஓவியக்கலை, சிற்பக்கலையின் பால் ஆர்வத்தையும் இரசனையையும்





கொண்டு வரும் நோக்கில் தன்னுடைய பெயரினாலே *Sajith Art Gallery* என்று நிறுவனத்தை உருவாக்கி, தன்னுடன் கல்விபயின்ற சில கலைஞர்களை உள்வாங்கி திருகோணமலையில் இக் கண்காட்சியை தனியொருவராக முன்னின்று செயற்படுத்தியமை சிறப்புக்கும் கண்காட்சிக்கும் அழகுதான்.

குறிப்பிட்ட இக்கண்காட்சியில் தன்னுடைய ஓவியங்கள் உட்பட ஆர். பிரேமா (மாத்தளை), எஸ். சசிரேகா (மட்டக்களப்பு) போன்ற பெண் ஓவியக் கலைஞர்களினது படைப்புகளையும் சேகரித்து மேலும்,என். அஜந்தன், டி. டிலக் ஷன் (அம்பாறை) போன்ற சிற்பக்கலைஞர்களினது சிற்பங்களையும் சேகரித்து, இக் கண்காட்சியை முதன் முதலில் திருகோணமலையில் பொது மக்களுக்காக காட்சிப்படுத்தப்பட்டது.

இது பற்றி அவர் குறிப்பிடுகையில், “இக் கண்காட்சியின் முக்கிய நோக்கம், கலைசார்ந்த அறிவை மக்கள் மத்தியில் கொண்டு சேர்ப்பதும் மக்களின் கலையார்வம் எந்த வகையில் மக்கள் மத்தியில் பிரதிபலிக்கின்றது என்பதை அறிவதுமே ஆகும்” என்றார்.

இவை தவிர பாடசாலையில் ஓவியம் பயிலும் மாணவர்கள் அனைவருக்கும் ஓவியக் கல்வி சார்ந்த தெளிவான விளக்க உரையும் எம். சாஜித்தால் வழங்கப்பட்டதுடன் சிற்பம் சார்ந்த விளக்கங்கள் அதன் உருவாக்கச் செயன் முறைகள் என்பனவும் அம்பாறை, காரைத்தீவில் இருந்து இக் கண்காட்சியின் உறுப்பினராக வந்த டி. டிலக்சனால் மாணவர்களுக்கும் பொது மக்களுக்கும் தெளிவு படுத்தப்பட்டது.

இக்கண்காட்சியில் எண்ணெய் வர்ணத்தினைக் கொண்டு கண்வஸ் துணியில் வரையப்பட்ட ஓவியங்கள் அதிகம் காட்சிக்கு உட்படுத்தப்பட்டிருந்ததுடன் அவ் ஓவியங்கள் ஆரம்ப காலம் அதாவது 17ஆம் நூற்றாண்டு தொடக்கம் நவீனம் மற்றும் சமகாலம் வரை எவ்வாறு மாற்றமுற்றது என்பதும் காட்சிக்கு வைக்கப்பட்ட ஓவியங்களின் மூலம் அறிய முடிந்தது.

கலைஞனின் படைப்புகளில் சிந்தனையாற்றலின் முக்கியத்துவம், உணர்ச்சிகளின் முக்கியத்துவம் அழகாக சிறப்பாக தெளிவாக காணப்பட்டது.

கண்காட்சிக்கு வருகை தந்த பார்வையாளர்களுக்கு ஓவியங்களை வரையத் தூண்டும் ஆர்வத்தை ஏற்படுத்த அவர்களுக்கு கண்வஸ் துணியில் வரைதல் செயற்பாடுகளும் செயற்படுத்தப்பட்டிருந்தமை ஒரு சிறப்பு நிகழ்வாகும்.




# பயிற்சியும் முயற்சியும் வெற்றியின் இரகசியம்

## தேசிய ரீதியில் விருதுபெற்ற காரைதீவு சிவஜோதி கூறுகிறார்







வி.ரி. சகாதேவராஜா



“சும்மா வீட்டில் அல்லது பக்கத்து வீட்டிற்குச் சென்று அரட்டை அடித்து, வீண்வம்பை விலைக்கு வாங்கி காலத்தைகழிக்காமல், பயனுள்ள தொழில் முயற்சியில் ஈடுபட்டால் நாம் மகிழ்ச்சியாக நிம்மதியோடு வாழலாம்” என்கிறார், வளர்ந்து வரும் 50 பெண் தொழிலதிபர்களில் ஒருவராக, அகில இலங்கை ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட காரைதீவு பெண்மணி கோபாலசிங்கம் சிவஜோதி.

இலங்கையில் வளர்ந்துவரும் முதல் 50 பெண் தொழிலதிபர்களில் ஒருவராக அம்பாறை மாவட்டத்தில் இருந்து தெரிவான தொழில்முயற்சியாளரான காரைதீவு 12ஐச் சேர்ந்த சிவஜோதி, தனது வெற்றியின் அனுபவங்களை அடக்கமாகப் பகர்ந்துகொண்டார்.

வளர்ந்து வரும் 50 பெண் தொழிலபர்களைப் பாராட்டும் விதமாக *Women Top50* - 2021 விருது வழங்கும் விழா, கொழும்பு ஷங்கிரிலா ஹோட்டலில் செவ்வாய்க்கிழமை (18) நடைபெற்றபோது, ‘காரைதீவு லக்ஸ்மி புரோடக்ஸ்’ உரிமையாளரான கோ. சிவஜோதியும் *Women Top50* விருதைப் பெற்றுக்கொண்டார்.

“கடந்த 10-12 வருட கால பயிற்சியும் முயற்சியுமே எனது வெற்றியின் இரகசியம் என்று கூறும் ‘வெற்றிப் பெண்மணி’ சிவசோதியுடனான அனுபவப்பகிர்வை, கேள்வி-பதில் வடிவில் மேலே தருகின்றோம்.

**கேள்வி:** ஆரம்பத்தில் எவ்வாறு தொழிலை ஆரம்பித்தீர்கள்?

**பதில்:** ஆரம்பத்தில் சின்ன பகோடா ஐந்து ரூபாய் பக்கட் போட்டு, கடைகளுக்கு கொடுத்தேன். அப்போது எமதூரைச் சேர்ந்த ரமணன் எனும் கடைமுதலாளிதான் ஊக்குவித்தார். அதன்பிறகு பிரதேச செயலகத்தில் 2011இல் பதிவுசெய்து தொழிலைச் செய்தோம். பருத்தித்துறை வடை, மரவள்ளிக்கிழங்குச் சீவல், பகொடா, முறுக்கு, பயற்றைஉருண்டை, லட்டு, பலகாரம் போன்ற உணவுப்பொருட்களை, சுகாதாரமுறைப்படி, சுத்தமாகத் தயாரித்து வழங்கி வருகிறோம்.

ஆரம்பத்தில் சிறுகைத்தொழிலாக 2,000 ரூபாய் முதல் போட்டு, இரண்டு கிலோ மாவில் தொடங்கிய இத்தொழில், படிப்படியாக வளர்ந்து இன்று இரண்டு மூடை மாவைப் பயன்படுத்துகின்ற அளக்கு வந்துள்ளது. விறகு அடுப்பில் ஆரம்பித்து, தற்போது எரிவாயு அடுப்பைப் பயன்படுத்துகிறோம். இதற்காகப் பதிவுசெய்து லைசன்ஸ் எடுத்தோம். எமது தயாரிப்புகளை கணவர் கடைகளுக்கு விநியோகம் செய்து வருகின்றார்.

**கேள்வி:** தங்கள் குடும்பப் பின்னணியைக் கூறுங்கள்?

**பதில்:** நான், எமது தாய் தந்தையுடன் காரைதீவு 9ஆம் பிரிவில் வசித்துவந்தேன். சுனாமி எமது குடும்பத்தை சூறையாடிவிட்டது. அம்மா, இரண்டு தங்கச்சி, மச்சாள் எல்லாமாக 45 பேர் சுனாமியில் இறந்தனர். ஜோ. யேசுமணி என்பவரை 20 வருசத்துக்கு முன்னர் கல்யாணம் செய்தேன். 13 வருடங்களுக்கு பிறகு உபாஷனா (08) என்ற பெண்பிள்ளை பிறந்தார்.

**கேள்வி:** தேசிய மட்டம்வரை உயர்ந்த நீங்கள், படிப்பு தொடர்பில் கூறுங்கள்?

பதில்: விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியை படித்து, இடைநிலைக் கல்வியை விபுலாநந்தாவில் ஒன்பதாம் வகுப்புவரை மாத்திரமே படித்தேன். அம்மாவுக்குச் சுகமில்லாமல் வரவே, படிப்பிற்கு முழுக்குப்போட்டு விட்டேன்!

கேள்வி: சரி! இவ்வாறு சுயதொழிலில் ஈடுபடவேண்டும் என்ற ஆர்வம் எவ்வாறு வந்தது?



**பதில்:** எனது அம்மாவின் பெற்றோர், பலகாரத் தயாரிப்பில் மிகுந்த ஈடுபாட்டைக் காட்டியிருந்ததாக அம்மா சொல்லுவார். அதுமட்டுமல்ல, நாமும் மற்றயவர்களைப்போல் வசதியாக வாழவேண்டுமானால், ஏதாவது தொழில் செய்தாக வேண்டும் என்ற ஆர்வம் வந்தது. அதன் வெளிப்பாடே இது.

எமது குடும்பத்தில் ஐந்து பெண் பிள்ளைகள். இளமையில் மிகுந்த கஸ்டப்பட்டோம். இனி அதனை நாம் மட்டுமல்ல யாரும் அனுபவிக்கக்கூடாது என்பதற்காக இத்தொழிலில் பலரையும் இணைத்துள்ளேன். தொழில்வழங்குகிறேன்.

**கேள்வி:** இத்தொழிலில் கிடைக்கும் ஊதியம் போதுமானதா?

**பதில்:** இதில் கிடைக்கும் ஊதியம் போதுமானது. மாசம் ஒன்றுக்கு ஒன்றரை இலட்ச ரூபாய் அளவில் விற்பனை நடக்கிறது. சந்தோசம்! நாம் கடனில்லாமல் சொந்தக்காலில் நிற்கிறோம்; நிம்மதியாக வாழ்கிறோம். இதைவிட என்ன தேவை?

இந்தத்தொழிலை மேலும் விஸ்தரிக்க வேண்டும். தொழில் வளரவளர இன்னும் சிலரை வேலைக்கு இணைத்து, பெரும்படியாக தயாரித்து வருகிறோம். தற்போது வடை செய்யும் மெஷின், மாப்பினையும் மெஸின், பாக் பண்ணும் இயந்திரம் என்பவற்றை கொள்வனவு செய்துள்ளோம். கடைகளுக்கு நல்ல ஓர்டர் வருகிறது. வெளிநாட்டுக்குப் போவோரும் வாங்குகிறார்கள். தைப்பொங்கல், சித்திரை வருடமென்றால் நிறைய ஓர்டர் வருகிறது. தயாரித்து முடிய, அத்தனையும் விற்பனையாகிவிடுகிறது. தைப்பொங்கலுக்கு அனைத்தும் விற்பனையாகிற்று; இப்போ பண்டங்கள் கைவசமில்லை. நிறைய கிராக்கி இருக்கிறது. உண்மையில் கூறப்போனால் இப்போ நேரம்தான் இல்லை.

**கேள்வி:** வெட்டியாய் காலத்தை கழிப்பவர்களுக்கு நீங்கள் சொல்லவிளைவது என்ன?

**பதில்:** சும்மா வீட்டில் அல்லது, பக்கத்து வீட்டிற்குச் சென்று அரட்டையடித்து, வீண்வம்பை விலைக்குவாங்கி, காலத்தைக் கழிக்காமல் இப்படிப் பயனுள்ள தொழில்முயற்சியில் ஈடுபட்டால், நாம் மகிழ்ச்சியாகவும் நிம்மதியோடும் வாழலாம்.

**கேள்வி:** இந்த விருது எப்படி சாத்தியமாயிற்று?

**பதில்:** அம்பாறை கச்சேரியூடாக விண்ணப்பித்து, இந்த விருது கிடைக்கப் பெற்றுள்ளது. சிறுவர், மகளிர் அமைச்சூடாக இந்தத்தெரிவு இடம்பெற்றது. இதற்கென அம்பாறைக் கச்சேரியில் இடம்பெற்ற நேர்முகப் பரீட்சையில் தோற்றினேன். மாவட்டத்தின் 20 பிரிவுகளில் இருந்தும் 20 தொழில்முயற்சியாளர்கள் கலந்துகொண்டபோதும், என்னை அவர்கள் தேர்ந்தெடுத்தார்கள். அதற்குப் பின்னர்தான் கொழும்பு விருதுக்குத் தெரிவானேன். இதனை நான் சற்றும் எதிர்பார்த்திருக்கவில்லை.

இந்தச் சந்தர்ப்பத்தில், என்னை ஊக்குவித்த அனைவரையும் குறிப்பாக, என்னுடன் வேலைசெய்வோர் முதலில் பாராட்டுக்கும் நன்றிக்கும் உரியவர்கள். அடுத்து, பிரதேச செயலகத்தினர், சமுர்த்தி பிரிவினர், விதாதா சங்கத்தினர், எனது கணவர், குடும்பத்தினர் அனைவரும் நன்றிக்குரியவர்கள்.

**கேள்வி:** சமுர்த்தி உதவிசெய்ததாக கூறினீர்கள். எவ்வாறு என விவரிக்க முடியுமா?

**பதில்:** ஆம்! நிச்சயமாக சமுர்த்தி மனேஜர் உள்ளிட்ட ஊழியர்கள் செய்த உதவிதான் நான் வளரக்காரணம் என்பேன். சமுர்த்தி நல்ல உதவி செய்கிறது. முதலில் ஒரு லட்சம் ரூபாய் வழங்கினார்கள்; பின்னர், இரண்டரை இலட்சம் ரூபாய் வழங்கினார்கள். நான் அவற்றை முழுமையாகப் பயன்படுத்தி அதனை மீளச்செலுத்தியும் வந்தேன். பின்னர் ஐந்து இலட்சம் ரூபாய் தந்தார்கள். தற்போது 10 இலட்சம் ரூபாய் கடன்தர முன்வந்துள்ளனர்.

**கேள்வி:** இந்த 12 வருட சுயதொழில் வாழ்வில், ஏதாவது சவால்களை எதிர்கொண்டீர்களா?

**பதில்:** ஏனில்லை? சவால்கள் பல! எனது ‘லக்ஸ்மி தயாரிப்பை இல்லாதொழிப்போம்’ என பொறாமையில் சொன்னவர்கள் உள்ளனர். அதற்கான முயற்சியிலும் ஈடுபட்டனர். நான் அதனையிட்டு அலட்டிக்கொள்ளவில்லை. செய்யும் தொழிலை நேர்மையாக, சிறப்பாக, தரமாகச் செய்துவந்தேன்.

**கேள்வி:** உங்கள் எதிர்கால இலட்சியம் என்ன?

**பதில்:** எனது இலட்சியம், இத்தொழிலை பெரியஅளவில் விஸ்தரித்து நாலு பேருக்கும் தொழில் வழங்கி, சகலரையும் பசிபட்டினி இன்றி வாழவைக்க வேண்டும்.







இந்திய கிரிக்கெட் அணியின் தலைமைப் பொறுப்பிலிருந்து

# விலக வைக்கப்பட்ட கோலி?



முருகவேல் சண்முகன்

இந்திய கிரிக்கெட் அணியின் டெஸ்ட் போட்டிகளுக்கான அணித்தலைமைப் பொறுப்பிலிருந்து கடந்த வாரம் விராட் கோலி விலகியிருந்தார்.

இந்த கோலி அணித்தலைமைப் பொறுப்பிலிருந்து விலகும் படலமானது நான்கு மாதங்களுக்கு முன்னர் சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு - 20 உலகக் கிண்ணத் தொடரைத் தொடர்ந்து இந்திய அணியின் இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டிகளுக்கான அணித்தலைமைப் பொறுப்பிலிருந்து கோலி விலகுவதாக அறிவித்ததிலிருந்து ஆரம்பமாகியிருந்தது.

ஒட்டுமொத்தமாக நோக்குமிடத்து சிறந்ததோர் அணித்தலைவராகவே கோலி காணப்படுகின்றபோதும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட போட்டிகளில் உலகக் கிண்ணம், உலக இருபதுக்கு - 20, சம்பியன்ஸ் கிண்ணம் என எவையையும் வெல்லாமல் இருந்தது கோலிக்குரிய பின்னடைவாகவே காணப்பட்டிருந்தது.

ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில், இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டிகளில் ஒட்டுமொத்த முடிவுகளை நோக்கும்போது சிறந்ததோர் அணித்தலைவராகவே கோலி காணப்படுகின்றார். எவ்வாறாயினும், விலகல் முறையில் அமையும் அரையிறுதி, இறுதிப் போட்டிகளில் தோற்பது பின்னடைவாகவே நோக்கப்படுகிறது.

இதற்கான பெரும் காரணமாக கோலிக்கு முன்னர் அணித்தலைவராகவிருந்த மகேந்திர சிங் டோணியின் உலகக் கிண்ண, உலக இருபதுக்கு - 20, சம்பியன்ஸ் லீக் வெற்றிகளும் காரணமாய் இருப்பதோடு, இந்திய அணியின் மோசமான மத்திய வரிசையும் ஒரு காரணமாய் காணப்படுகின்றது.

கோலி, றோஹித் ஷர்மா, ஷீகர் தவானிலேயே 75 சதவீதத்துக்கும் மேலாக ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் இந்தியா கோலியின் காலத்தில் தங்கியிருந்ததோடு, இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டிகளில் தவானுக்குப் பதிலாக இதில் லோகேஷ் ராகுலைப் பிரதியிடக் கூடியதாகக் காணப்பட்டிருந்தது.

ஆக, மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட போட்டிகளில் உலகக் கிண்ணம், உலக இருபதுக்கு - 20, சம்பியன்ஸ் லீக்கில் வெற்றியைப் பெற முடியாமைக்கு கோலியை மாத்திரம் காரணமாய் சொல்லிவிட முடியாது.

ஆயினும், டோணி, றோஹித் ஷர்மா ஆகியோருடன் ஒப்பிடுகையில் தலைமைத்துவ நுட்பங்களில் கோலி சற்றுக் குறைவாகக் காணப்படுகின்றார்.

எவ்வாறெனினும், டெஸ்ட் போட்டிகளில் இந்திய அணியின் அபரிதமான வளர்ச்சிக்கு கோலி என்ற தனிமனிதன்தான் காரணம் என்றால் அது மிகையாகாது.

ஏனெனில், கோலி ஒரு மூலோபயமான அணித்தலைவராக இல்லா விட்டால் கூட, தன்னிடமிருந்து 100க்கு 120 சதவீத அர்ப்பணிப்பை வழங்குவது போல ஏனைய வீரர்களிடமிருந்தும் அதை எதிர்பார்ப்பவர்.

அந்தவகையில், இந்திய அணியானது அவுஸ்திரேலியாவில், மேற்கிந்தியத் தீவுகளை இரண்டு டெஸ்ட் தொடர்களை வென்றமைக்கு, இங்கிலாந்தில் தொடரில் முன்னிலை வகிப்பதற்கு தன்னுடைய அணியைக் கூட்டிணைவாக கட்டியெழுப்பி செயற்படுத்திய முழுவதும் கோலியே காரணமாவார். 68 போட்டிகளில் 40 வெற்றிகளை கோலி பெற்றுக் கொடுத்திருந்ததுடன், 17 தோல்விகளையே பெற்றதோடு, 11 வெற்றி தோல்வியில்லாத முடிவுகளைப் பெற்றிருந்தார்.

முக்கியமாக மொஹமட் ஷமி, உமேஷ் யாதவ், இஷாந்த் ஷர்மா, ஜஸ்பிரிட் பும்ரா உள்ளிட்ட வேகப்பந்துவீச்சுக் கூட்டணியை கட்டியெழுப்பியமைக்கு கோலியே பிரதான காரணமாவார். வெளிநாடு தவிர, உள்நாட்டிலும் உமேஷ் யாதவ், மொஹமட் ஷமி, மொஹமட் சிராஜ் மூலம் மிகச் சிறப்பாகச் செயற்பட்டதோடு, இரவிச்சந்திரன் அஷ்வினிடமிருந்து முழுப் பெறுபேற்றையும் பெற்றமைக்கு கோலியே காரணமாவார்.

இந்நிலையில், இலங்கை, மேற்கிந்தியத் தீவுகள், அவுஸ்திரேலியாவில் தொடர்களை வெல்வதற்கு கோலியின் உப அணித்தலைவர் அஜின்கியா ரஹானே, செட்டேஸ்வர் புஜாராவை உள்ளடக்கிய மத்திய வரிசையே காரணமாயிருந்தது.

இதுவே அண்மைய காலங்களில் கோலி உட்பட இந்த மத்தியவரிசை பிரகாசிக்காத காரணங்களால் பின்னடைவை எதிர்நோக்கியிருந்த இந்தியா பந்துவீச்சாளர்கள், றோஹித் ஷர்மா, றிஷப் பண்ட், ஷர்துல் தாக்கூர், வொஷிங்டன் சுந்தர் உள்ளிட்ட பின்வரிசை வீரர்களாலேயே சமாளித்திருந்தது.

அந்தவகையில், கடந்த இரண்டாண்டு மேலாக சதத்தைப் பெறத் தடுமாறி வரும் கோலி, அணித்தலைமைப் பொறுப்பு என்ற அழுத்தத்திலிருந்து விலகி துடுப்பாட்டத்தில் கவனம் செலுத்தும் முகமாகவே அணித்தலைமைப் பொறுப்புகளிலிருந்து விலகியதாகத் தோன்றலாம்.

எவ்வாறாயினும், இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டிகளுக்கான அணித்தலைமைப் பொறுப்பிலிருந்து கோலி விலகியதும், அவரை விலக வேண்டாம் எனக் கோரியதாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் சௌரஃப் கங்குலி தெரிவித்திருந்த நிலையில், இதை கோலி மறுத்திருந்தார்.

தவிர, ஒருநாள் சர்வதேசப் போட்டி அணிக்கான தலைமைப் பொறுப்பிலிருந்து கோலி விலக்கப்பட்ட நிலையில், தன்னுடன் கலந்துரையாடப்படாமல் அணிக் கூட்டத்துக்கு சில மணித்தியாலங்களுக்கு முன்பாகவே தனக்கு அறிவிக்கப்பட்டதாக கோலி தெரிவித்திருந்தார்.

அந்தவகையில், கட்டுப்பாட்டுச் சபையுடன் கோலியுடன் பூசல் ஏற்பட்டுள்ளது தெரிய வந்த நிலையில் வளர்ந்து வரும் தென்னாபிரிக்க அணியுடனான டெஸ்ட் தொடர் தோல்வியைத் கோலியின் அப்பதவிக்கும் ஆப்பு வைக்கப்படலாம் எனக் கருதப்பட்ட நிலையிலேயே டெஸ்ட் போட்டிகளுக்கான அணித்தலைமைப் பொறுப்பிலிருந்தும் கோலி பதவி விலகியிருக்கின்றார்.

கோலிக்கு 33 வயதாகின்ற நிலையில் அடுத்த நிலைத் தலைவரொருவரை வளர்த்தெடுத்து அவரிடம் அணியைக் கையளிப்பதற்கான காலம் சரியென்றபோதும், டெஸ்ட் போட்டிகளிலும் சரி மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட போட்டிகளிலும் சரி கோலியின் வயதையொத்த உப தலைவர்களே காணப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், சரி இளம்வீரரொருவரை வளர்த்தெடுக்க இரண்டு ஆண்டுகள் போதுமென்றபோதும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட போட்டிகளுக்கான அணித்தலைமைப் பொறுப்பை றோஹித் ஷர்மாவுக்கு வழங்கியது போல டெஸ்ட் போட்டிகளுக்கும் அவரையே அணித்தலைவராக நியமிப்பதே தற்போதையே சிறந்த தெரிவாக உள்ளது.

ஆயினும் கோலியின் அணியானது உச்சத்தை அடைவதற்கு சமரசமில்லாத உடற்றகுதி மட்டங்களே காரணமாயிருந்த நிலையில், ஷர்மாவின் உடற்றகுதி பிரச்சினைக்குரியதொன்றாகக் காணப்படுகின்றது.

அடுத்து ராகுலைப் பொறுத்தவரையில் தென்னாபிரிக்காவுக்கெதிரான இரண்டாவது டெஸ்ட், முதலாவது ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் அணியைக் கூட்டிணைக்காமல் தனித்தவராகவே அவர் காணப்பட்டிருந்தார். றிஷப் பண்ட்டுக்கு அனுபவம் போதாதென்பதோடு, இரவிச்சந்திரன் அஷ்வின் சில வெளிநாடுகளில் இடம்பெறும் போட்டிகளில் பதினொருவர் அணியில் இடம்பெறுவதில்லை என சிக்கலாகக் காணப்படுகின்றது.

தவிர, உப அணித்தலைவராக இருந்த ரஹானே அணியிலேயே இல்லாமல் இருக்கும் நிலைக்கு உள்ளாகியிருந்தார்.

இந்நிலையில், கோலியைச் சமதானப்படுத்தி மீண்டும் அவரையே அணித்தலைமைப் பொறுப்பை டெஸ்ட் போட்டிகளில் ஏற்கச் செய்தால் அதனால் நன்மை அடையப் போவது இந்திய கிரிக்கெட்



குஞ்சங்கற்குளம், மதுரங்கேணிக்குளம் கிராமங்களின்

# ஆதிவாசி மக்களின் ஆதங்கம்



வ. சக்திவேல்
shagthivel@gmail.com

மட்டக்களப்பு மாவட்டத்தின் கோறளைப்பற்று வடக்கு வாகரைப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்டதே குஞ்சங்கற்குளம், மதுரங்கேணிக்குளம் ஆகிய ஆதிவாசி மக்கள் வாழும் கிராமங்களாகும். காட்டுப் பகுதியை அண்டியதாக குஞ்சங்கற்குளம், மதுரங்கேணிக்குளம் ஆகிய கிராமங்கள் அமைந்துள்ளன. குஞ்சங்கற்குளம் கிராமத்தில்தான் மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களுக்கான ஆதிவாசி மக்களின் தலைவர் நல்லதம்பி வேலாயுதம் வசித்துவருகின்றார்.

ஆதிவாசி மக்களின் தலைவர் நல்லதம்பி வேலாயுதம் கூறுகின்றார், “எமது கிராமத்தில் புதிதாக திருமணம் செய்த குடும்பங்கள், வீட்டு வசதியின்றி தமது பெற்றோருடன்தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். வனவளத் திணைக்களத்தால் எம்மைச் சூழவுள்ள நிலப்பரப்பில் எல்லைக் கற்கள் இட்டுள்ளதால், புத்திதாக வீட்டுத்திட்டங்களை அமைப்பதற்குரிய நிலப்பகுதியைப் பெறுவதற்குச் சிரமமாகவுள்ளது. இந்த நிலையில் சிறிய நிலப்பகுதியைப் பெற்று, சிறியதோர் இலுக்குப்புல் குடில் கட்டி வாழ்வதற்கும் முடியாத நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அவ்வாறு குஞ்சங்கற்குளத்தில் சுமார் 18 குடும்பங்களும், மதுரங்கேணிக்குளம் கிராமத்தில் சுமார் 30 குடும்பங்களுமாக வீடுகளின்றி வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்” என்றார்.

மேலும் அவர் விவரிக்கையில், “முன்னர் நாங்கள் இலுக்குப் புல் வேயப்பட்ட கொட்டில்களில் வாழ்நதோம்; கல் வீடு என்றால் என்ன என்று தெரியாத நிலைமை இருந்தது. அவ்வாறு வாழ்ந்து வந்த எமக்கு, யுத்தத்துக்குப் பின்னர் ‘நேர்ப்’ திட்டத்தினூடாக, அரசாங்கம் கல்வீடுகளைக் கட்டித்தந்தார்கள். அப்போதைய நிலையில், ஒரு வீடு கட்டுவதற்கு எவ்வாறான மண், கல், மரம் போன்றன அதற்குப் பாவிக்க வேண்டும் என்பது எமக்கு தெரியாது. இவ்வாறு எமது மக்களுக்காக நூறுக்கு மேற்பட்ட வீடுகள் கட்டித்தந்தார்கள்.

அப்போது நாங்கள், இலுக்குக் கொட்டில்கைளை விட்டுவிட்டு, அரசாங்கம் கட்டித்தந்த கல்வீட்டுக்கு மாறினோம். இப்போதுதான் தெரிகின்றது, எமது வீடுகளுக்குப் பயன்படுத்தியுள்ள தளபாடங்கள் அனைத்தும் தரம் குறைந்தவையாக உள்ளன. மழை பெய்தால் வீட்டுக்குள்தான் மழைநீர் வருகின்றது. இந்நிலையில் 2019 இல் அரசாங்கத்தால் சில வீடுகள் திருத்திக் கொடுக்கப்பட்டன. பின்னர், எமது அடையாள அட்டை, காணி உறுதிப்பத்திரம் உள்ளிட்டவற்றை போட்டோ பிரதி எடுத்து தருமாறு அடிக்கடி கேட்பார்கள். நாங்கள் மிகுந்த பிரயத்தனப்பட்டு பிரயாணம் செய்து, அதனைக் கொடுத்து வருகின்றோம். ஆனாலும், எதுவித முன்னேற்றமும் இல்லை” என்றார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஆதிக்குடிகளும் பூர்வீகக் குடிகளுமாக வாழ்ந்துவரும் ஆதிவாசி மக்கள் மத்தியில், இளவயது திருமணம், சுகாதார நடைமுறைகள், உள்ளிட்ட பல விடயதானங்களில் விழிப்புணர்வுகள் தேவையாக இருக்கின்றது. அதுபோல் அங்குள்ள வீதிக்கட்டமைப்புக்கள், வீடமைப்பு, மலசலகூட வசதிகள், போக்குவரத்து, வாழ்வாதார நலனோம்பு திட்டங்கள் உள்ளிட்ட பல விடங்களை துறைசார்ந்தவர்கள் மேம்படுத்திக் கொடுக்க வேண்டிய தார்மீக பொறுப்பும் உள்ளது.





நல்லதம்பி வேலாயுதம்



பொ.மங்களரூபன்

இதுகுறித்து, ஆதிவாசி மக்களின் தலைவர் நல்லதம்பி வேலாயுதம் மேலும் கூறுகையில், “நகர்ப்பகுதியை எடுத்துக் கொண்டால் அனைத்து வீதிகளுக்கும் காபட் இடுவதும் கொங்றீட் இடுவதும் கிறவல் இடுவதுமாகத்தான் வீதி அபிவிருத்திகள் முன்னெடுக்கப்படுகின்றன. எமது கிராமத்தின் நிலைமை குறித்து ஜனாதிபதி, அமைச்சர்களுக்கு எழுத்துமூலம் அறிவித்திருந்தேன். அதன் நிமிர்த்தம் குறிப்பிட்ட அளவுதான் வீதி செப்பனிடப்பட்டுள்ளது. மழைக்காலத்தில் எமது வீதியூடாக எந்த விதத்திலும் பயணிக்க முடியாது. அவ்வாறு கர்ப்பிணித் தாயொருவரை நான், கையிலே தூக்கிக் கொண்டு சென்றேன். பின்னர் லொறி ஒன்று வந்தது; அதில் ஏற்றிக் கொண்டு சென்றேன்.

நாங்கள் வோட்டு போட்டு வெற்றிபெற வைத்த மக்கள் பிரதிநிதிகளும், எம்மைக் கவனிக்காமல் உள்ளார்கள். சிலர் வருகின்றார்கள்; போகின்றார்கள். வீதிகளை அளவீடு செய்துவிட்டுப் போகின்றார்கள். ஆனால், எதுவும் நடைபெற்றதாக இல்லை. இது எல்லாம் பார்க்கும்போது மன விரக்தியுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

எமது கிராமத்தில இளவயது திருமணங்கள் இடம்பெற்று வருகின்றன. குறிப்பாக பாடசாலைப் பருவத்திலேயே பிள்ளைகள் திருமணம் செய்து கொள்கின்றார்கள். முன்னர் இளவயதுத் திருமணங்களையும் பாடசாலை இடைவிலகல்களையும் நாங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருந்தோம்.

இதன் முற்றுமுழுதான தவறு பெற்றோர்களிடத்தில்தான் உள்ளது. பிள்ளைகள் பாடசாலையில் படிக்கும்போதே திருமண ஆசையை பெற்றோர் வளர்கின்றார்கள். இதனால் படிப்பில் பிள்ளைகள் அக்கறைகாட்டுவது குறைந்து விடுகின்றது. இதில் பிள்ளைகளின் தவறு கிடையாது; பெற்ரோரின் குறைபாடுதான்.

மதுரங்கேணிக்குளம் கிராமத்தில் அமைந்துள்ள பாடசாலையில் எமது பிள்ளைகள் படிக்கின்றார்கள். மிகவும் வறுமைக்குட்பட்ட எமது பிள்ளைகளின் நலன் கருதி, இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்புக் கிளையால்,



சமைத்த உணவு, பசும்பால் போன்றன அண்மைக்காலமாக வழங்கப்பட்டு வரப்படுவதோடு, பாடசாலைக்குரிய கணினிகளையும் வழங்கியுள்ளார்கள். அந்த அமைப்புக்கு எமது கிராமம் சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் பாசாலைக்கு ஆசிரியர் பற்றாக்குறையும் காணப்படுகின்றது” என்றார்.

மட்.ககு.மதுரங்கேணிக்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் அதிபர் பொ.மங்களரூபன் தெரிவிக்கும்போது, “பிள்ளைகளின் மீதும், சமூகத்தின் மீதும் பெற்றோரின் அக்கறையின்மை காரணமாகத்தான் பிள்ளைகள் அதிகளவு இடைவிலகிச் செல்கின்றனர். சிறு வயதில் குறிப்பாக பாடசாலை படிக்கும் காலத்திலேயே திருமணம் செய்து வைக்கின்றனர்.

கடந்த யுத்த காலத்திலிருந்து இற்றை வரையில் இப்பாடசாலையில் இருந்து கற்பித்து வருகின்றேன். ஆசிரியர்கள் நூற்றுக்கணக்கான கிலோ மீற்றர் கடந்து வந்து, இங்குள்ள மாணவர்களின் நலன் கருத்தி, அர்ப்பணித்து பாடம் புகட்டுகிறார்கள். மாணவர்களும், கல்வி கற்பதற்குத் தயாராக உள்ளார்கள். பெற்றோர்கள், மாணவர்களை பாடசாலை நேரங்களில் தொழில்களுக்கு அனுப்புவதும், கற்றலுக்கு ஒத்துழைப்பு வழங்காத நிலைமையும் தொடர்கின்றது.

இதனைவிடுத்து பாடசாலைப் பருவத்திலேயே மாணவர்களுக்கு அந்தப் பிஞ்சு வயதில் திருமணம் செய்து வைக்கின்ற துர்ப்பாக்கிய நிலைமையும் இப்பகுதியில் காணப்பட்டு வருவதானது மிகுந்த வேதனையளிக்கின்றது. இந்த நிலைமைய இன்னும் தொடர விடாமல், பெற்றோர் பார்த்துக் கொள்ள வேண்டும். மதுரங்கேணிக் குளத்திலிருந்தும் அரச உத்தியோகஸ்தர்கள் உருவாக வேண்டும். அதற்கு தமது பிள்ளைகளின் கற்றல் நடவடிக்கைகளுக்கு ஆசிரியர்கள் எவ்வாறு முயற்சி எடுக்கின்றார்களோ அதுபோல் பெற்றோரும் ஒத்துழைக்க வேண்டும்.

தற்போது மிகவும் பெறுமதியான கணினி, பிறிண்டர், லெப்டொப், உள்ளிட்ட கற்றலை இலகுவாக்கும் சாதனப் பொருட்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. அதனை இந்த மாணவர்கள் அனுபவிக்க வேண்டும்” என்றார்.

வாகரைப் பிரதேச செயலாளர் ஜி. அருணன் தெரிவிக்கும்போது, மேற்படி கிராமமக்களின் வீடமைப்பு, மலசலகூடம், வீதி அபிவிருத்தி, வாழ்வாதாரம் உள்ளிட்ட பல தேவைகளை படிப்படியாக பூர்த்தி செய்து கொடுப்பதற்கு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்போது அங்குள்ள பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களுக்கு அவர்களின் காலடிக்கே கொண்டுசென்று வழங்குவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது” என்றார்.

பிரதேச செயலாளரின் கருத்து அப்பகுதி மக்களுக்கு ஓரளவு ஆறுதலளிப்பதாக இருந்தாலும், ‘சாண் ஏற முழம் சறுக்குவது’ போன்றுதான் குஞ்சங்கற்குளம், மதுரங்கேணிக்குளம் ஆகிய கிராம மக்களின் வாழ்க்கை நகர்ந்து கொண்டிருப்பதாக அறிய முடிகின்றது.

அபிவிருத்தியின்பால், ஆதிவாசிகளின் அபிலாஷைகளை ஆற்றுப்படுத்துவதற்கு யார் கைகொடுப்பார் என ஏங்கிநிற்கும் அம்மக்களுக்கு, காலத்தின் தேவையறிந்து சேவை செய்ய வேண்டியது துறைசார்ந்தவர்களின் தலையாய கடமையாகும். எனவே, ஆதிவாசி மக்களின் வாழ்வையும் வளம்பெறுவதற்கு வழிசமைக்க அனைவரும் முன்நிற்க வேண்டும்.

# உறவுக்களைத் தேடித்தேடியே மாண்டுபோகும் உறவுகளுக்குப் பதிலென்ன?

நாங்கள் இல்லாத போதுதான், எங்களுடைய அருமையெல்லாம் உங்களுக்குத் தெரியுமென, வீடுகளில் பெரியவர்கள் இன்னும் கூறுவதை கேட்கமுடியும். ஆனால், வடக்கு, கிழக்கைச் சேர்ந்த பெரும்பாலான பெரியவர்கள், தங்களுடைய உறவுகளைத் தேடி அலையும் நிலைமை, இன்னுமே தொடர்ந்துகொண்டுதான் இருக்கின்றது.

அன்றிருந்த அரசாங்கத்தால் கூறப்பட்டதைப் போல, மனிதாபிமான நடவடிக்கையின் பின்னர், அதாவது யுத்தத்துக்குப் பின்னர், தாங்களாகவே கைகளைப் பிடித்து, தங்களுடைய கண்களுக்கு முன்பாகவே, படையினரிடம் கையளிக்கப்பட்ட இளைஞர்கள், யுவதிகளில் பலர் இன்னுமே வீடுகளுக்குத் திரும்பவில்லை.

இருக்கின்றார்களா, இல்லையா? அவர்களின் உயிர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் உத்தரவாதம் உள்ளிட்டவை தொடர்பிலான சந்தேகக் கேள்விகளுக்கு இன்னும் விடை கிடைக்கவில்லை. தேடித்தேடி அலைந்து கால்கள் சோர்ந்துவிட்டன. கண்ணீர் விட்டழுது, அழுது கண்ணீர் வற்றி, கண்கள் வரண்டுவிட்டன.

இருந்தாலும், உறவுகளைத் தேடிக்கொண்டிருக்கும் உறவினர்களின் போராட்டங்கள் தொடர்ந்துகொண்டுதான் இருக்கின்றன. போராட்ட வடிவங்களை மாற்றி, முன்னெடுக்கின்றனர். வவுனியாவில், சுழற்சி முறையிலான உணவுத்தவிர்ப்பு போராட்டம் 1,799 நாளாக இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றது.

இதில், பங்கேற்றிருந்த பலர், வயது முதிர்வு, நோய்வாய்ப்பட்ட நிலையில், உறவுகளைக் காணாமலே கண் மூடிவிட்டனர். மற்றுமோர் தாய், நேற்று (21) மரணித்துவிட்டார். அவருடன் சேர்ந்து, காணாமலாக்கப்பட்டவர்களை தேடிக்கொண்டிருக்கும் போதே மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை, அதிகரித்துவிட்டது.

இந்நிலையில், ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடரை ஆரம்பித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, "யுத்தத்தால் காணாமற்போனவர்கள் தொடர்பான பிரச்சினை, ஒரு தரப்பினருக்கு மாத்திரம் பொதுவானதல்ல. அனைவருக்கும் எம்மால் முடிந்தளவில் நீதி, நியாயம் வழங்க நாங்கள் நடவடிக்கை எடுப்போம்" என, தனது அக்கிராசன உரையில் பூசி மெழுகிவிட்டார்.

ஆக, காணாமற் போனவர்களின் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காணப்படுமென கனவில் கூட நினைக்க முடியாது. அத்துடன், அடுத்த ஐ.நா கூட்டத்துக்கு வழங்கப்படவிருக்கும் பதிலின் ஒத்திகையாகக் கூட, இந்தக் கூற்று அமைந்துள்ளது என்றால் அதில் தவறில்லை. அதற்குள் தங்களுடைய உறவுகளைக் காணாமலே, எத்தனை உறவுகள் கண்மூடப்போகின்றன என்பதற்கெல்லாம் காலம்தான் பதில்சொல்லும்.

பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாமல் அதில், குளிர்காய்ந்து அரசியல் பிழைப்பு நடத்துவதை தவிர்க்கவேண்டும். ஏனெனில், தங்களுடைய கைகளால், பிடித்து, கண்முன்னே ஒப்படைக்கப்பட்ட உறவிகளுக்கு நடந்தது என்ன? என்றே உறவினர்கள் கேட்டுக்கொண்டிருக்கின்றனர். அல்லது, தேடிக்கொண்டிருக்கும் சகல உறவுகளும் மரணித்துவிட்டால், காணாமற்போனவர்கள் பிரச்சினை நீர்த்துப்போகும்; அதற்குப் பின்னர், கேள்வியும் கேட்கமாட்டார்கள். பதில் சொல்லவேண்டிய தேவையும் இருக்காதென அரசாங்கம் நினைத்துக்கொண்டிருந்தால், அந்த நினைப்பை கைவிட்டு, ஒப்படைக்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு பதிலளிக்க வேண்டிய தார்மிக பொறுப்பு அரசாங்கத்திடமே உள்ளது என்பதை நினைவில் கொள்க.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


# ஒத்துழையாமையின் பிரதிபலிப்பு

லக்ஸ்மன்

கொவிட்-19 பெருந்தொற்றாகப் பரவியதற்கும், ஒவ்வொரு நாடும் இப்போதும் இன்னல்படுவதற்கும் ஒற்றுமையின்மையும் ஒத்துழையாமையுமே காரணமாகும். இதனை யாருக்கும் மறுத்துவிட முடியாது. உலகின் அனைத்து நாடுகளிலும் படித்தவர்கள் முதல், பாமரர்கள் வரை வாழ்வாதாரத்தையே முன்னுரிமைக்குரிய விடயமாகக் கொள்ள வேண்டிய கட்டாயம் இதற்கு முக்கியமானதொரு காரணமாகும்.

2022ஆம் வருடத்துக்கான நாடாளுமன்றக் கூட்டத்தொடரைத் தொடங்கி வைத்து, தனது அக்கிராசன உரையை நிகழ்த்திய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, 'நான் கொண்டது மாத்திரமே கொள்கை; அதுவே இலக்கு; வேறு யாருக்கும் கொள்கையில்லை; நோக்கமில்லை, இலக்கில்லை' என்ற தோரணையிலேயே உரையாற்றியிருக்கிறார்.

இந்த உரையானது, பொதுஜன பெரமுன கூட்டணியில் இருப்பவர்களில் பெரும்பாலானவர்கள் கூட ஒத்துழையாமை என்ற நிலைப்பாட்டில் இருக்கையிலேயே நிகழ்த்தப்பட்டிருக்கிறது. அவரது உரை மீதான மறுநாள் விவாதம், வெறிச்சோடிய நாடாளுமன்றத்தில் நடைபெற்றமையை இதற்கு அடையாளமாகச் சொல்லலாம்.

"ஜனாதிபதியின் உரை, 'யானை விழுங்கிய விளாம்பழம்' போன்றது. அதில் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு இல்லை. நாட்டின் இக்கட்டான சூழ்நிலையில் நாடாளுமன்றத்தை ஒத்திவைத்து, நாடாளுமன்ற நடவடிக்கைகளை நிறுத்தி வைத்த ஜனாதிபதி, தனது கொள்கை அறிக்கையில் ஏன் நாடாளுமன்றத்தை ஒத்திவைத்தார் என்பதை தெளிவுபடுத்துவார் என எதிர்பார்த்தால், அவர் தனது பழைய கதைகளையே மீண்டும் கூறியிருக்கிறார்" என்று திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் கருத்து வெளியிட்டுள்ளார். "இராணுவ சிந்தனையிலும், தான் வைத்திருந்த துப்பாக்கி முனைகளிலும் மட்டும்தான் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சிந்தனை இருக்கிறது. இந்த நாடு நியாயமான அல்லது நீதியான பாதையில் செல்வதற்கு தயாரில்லை என்பதைத்தான் ஜனாதிபதியினுடைய உரை குறிப்பிட்டுள்ளது. இந்த நாடு ஒரு சீரான பாதையில் நேர்த்தியாகச் செல்ல வேண்டுமென்றால் இந்த நாட்டினுடைய மிக முக்கியமான இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமானால் முதலில் ஜனாதிபதி தன்னுடைய மனதை மாற்ற வேண்டும். அப்போதுதான் ஏனைய இனங்களும் மதிக்கப்படும். அவர்களுடைய சுதந்திரமும் பேணப்படும்" என்று என தமிழ் தேசியக்கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் தெரிவித்திருக்கிறார்.

ஜனாதிபதியின் உரை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், "ஜனாதிபதியின் உரையில் நாட்டின் முக்கிய பிரச்சினைகள் பற்றிய பார்வை எதுவும் இருக்கவில்லை. முழுமையான உரையில் ஓரிடத்தில் நாட்டில் வெளிநாட்டு நாணயம் தொடர்பான பிரச்சினை இருக்கிறது என்பதை ஒப்புக் கொண்டதைத் தவிர, பிறிதொரு விடயமும் இல்லை. நீண்டகாலமாக நாட்டில் இருக்கின்ற பிரச்சினையென ஒரு விடயத்தைக் குறிப்பிட்டு, அது கடந்த காலங்களில் ஆட்சியிலிருந்த பல அரசாங்கங்களாலும் தீர்க்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டி, அதன் மூலம் அந்தப் பிரச்சினையை இன்னொருவர் தோளில் சாட்டவே ஜனாதிபதி முயன்றுள்ளார். ஆனால், பிரச்சினையை அடையாளம் கண்ட அவர், தீர்வினை அடைவதற்கான வழிமுறைகளை முன்வைக்கத் தவறிவிட்டார்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு பலரும் தங்களது கருத்துகளை வெளியிட்டுள்ளனர். ஒவ்வொருவருடைய கருத்தும் பெரும் விமர்சனங்களையே வெளிப்படுத்தியிருக்கின்றன.

ஆனால், ஜனாதிபதியைப் பொறுத்தவரையில், இன்னமும் மூன்று வருடங்கள் பொறுத்திருங்கள்; நான் சொன்னதைச் செய்வேன் எனச் சொல்லலாம். அந்த வகையில், மாற்றம் எதுவும் இன்றி, தான் கொண்ட கோலத்தை நடத்தவே திட்டமிடுகிறார் என்பது வெளிப்படையாகின்றது.

பொறுப்புக்கூறல், அரசியலமைப்பு உருவாக்க முயற்சி, காணாமல் போனோர் பிரச்சினைக்குத் தீர்வு, பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் திருத்தம், பசுமை விவசாயக் கொள்கை உள்ளிட்ட பல விடயங்களை உள்ளடக்கியிருந்த இந்த உரையில், இலங்கையில் சிறுபான்மை மக்களின் பிரச்சினைகள் குறித்து எந்த ஒரு கருத்தையும் முன்வைக்கவில்லை. பெரும் எதிர்பார்ப்பாக இருந்த வேறும் பல விடயங்கள் கணக்கிலெடுக்கப்படவில்லை என்பது பிரதானமான விமர்சனங்களாக இருக்கின்றன.

பொதுவான நாட்டின் செயற்பாடுகள் குறித்து, அரசாங்கத்தில் அங்கம் வகிப்பவர்களுக்கு இடையில் ஒத்துழையாமை காணப்படுகிறது. ஒத்துழையாமை என்பதற்கு தலைமைக்கு ஒத்துழைக்காமை, தலைமை ஒத்துழைக்காமை, ஒருவருடன் ஒருவர் உடன்படாமை என்று பலவாறாகக் கொள்ளமுடியும். இங்கு ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் இந்தக் குழப்பம் இருப்பதை அறிய முடிகிறது. அதேநேரத்தில் சர்வாதிகாரப் போக்கான ஜனாதிபதியின் செயற்பாடு காரணமாக, அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்ற கட்சிகள், விலகியிருக்கும் அல்லது ஒதுங்கியிருக்கும் நிலைப்பாட்டுக்கு வந்துள்ளதாகவே கொள்ள முடிகிறது.

இராஜாங்க அமைச்சராக இருந்த சுசில் பிரேமஜயந்தவின் பதவி பறிக்கப்பட்டமையானது, பல்வேறு விதமான பதிவுகளை விட்டுச் சென்றிருக்கிறது. அது, அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்ற கட்சிகள், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களை ஓர் இறுக்கமான கட்டுப்பாடான நிலைக்குக் கொண்டு சென்றிருக்கிறது. இதனைச் சர்வாதிகாரச் செயற்பாட்டு முறைமையாகவே கொள்ள முடியும்.

இவ்வாறிருக்கையில், நாடு சுதந்திரமடைந்த காலம் தொட்டு அதிகார ரீதியான போட்டிகளுக்குள் முண்டுப்பட்டு, அடக்குமுறை ரீதியான நெருக்கடிகளுக்குள் சிக்குண்டு, அகிம்சை, ஆயுதம், இராஜதந்திரம் எனத் தொடர்ந்து கொண்டிருக்கும் இனப்பிரச்சினைக்கான தீர்வினை வழங்குவதற்கான ஒத்துழையாமை ஒன்றினை ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ உருவாக்கி வருகிறார்.

ஆரம்பத்தில் வெளிநாடுகளின் அழுத்தங்களையும் புலம்பெயர் அமைப்புகளின் கருத்துகளையும் சட்டை செய்தாத அவர், இப்போது புலம்பெயர் அமைப்புகளை நாடி வருகிறார்.

இதற்கு நல்ல உதாரணம் அமெரிக்காவின் நியூயோர்க் சென்றிருந்த வேளை, அவர் விடுத்த புலம்பெயர் தமிழர்களுக்கான அழைப்பு மற்றும் சில தினங்களுக்கு முன்னர் நாட்டுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஐக்கிய இராச்சியத்தின் தெற்காசிய மற்றும் பொதுநலவாய விவகாரங்களுக்கான இராஜாங்க அமைச்சர் தரிக் அஹமட்டிடம் அங்குள்ள புலம்பெயர் தமிழர்களுடன் பேசுவதற்கு வாய்ப்பேற்படுத்தும்படி கோரியமை போன்றவற்றினைக் குறிப்பிட முடியும்.

முக்கியமாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பினைச் சந்திப்பதற்கான அழைப்பினை தாமாகவே விடுத்துவிட்டு, அதனை இரத்துச் செய்து இன்னமும் மீள அழைக்காதிருப்பது கூட, ஓர் ஒத்துழையாமையின் படிநிலையே.

இது ஏன் நடைபெறவில்லை என்பதற்கு காரணம் திரைமறைவானதாகவே இருக்கிறது. மிகவும் இராஜதந்திரமாக நகர்வதாகக் காட்டிக்கொள்ளும், வீண் முயற்சியாகவே இதனைக் கொள்ள முடியும்.


உள்ளே இருப்பவர்களை உதறித்தள்ளிவிடுதல் என்ற நிலைப்பாட்டுக்கு, நாட்டின் பொருளாதாரத்தினை நிமிர்த்துவது ஒன்றே நோக்கம் என்றே கொள்ள முடியும். இன்றொரு வகையில் தமிழர்களை ஏமாற்றும் மற்றொரு முயற்சியாகவும் சந்தேசிக்க முடிகிறது.

அந்தவகையில் அவர்களுடைய ஒழுங்கிலேயே, தமிழ் மக்களின் அரசியல் தரப்பும் ஒத்துழையாமை நிலைப்பாட்டினை பிரதிபலித்திருக்கிறது. அதன் ஒரு படிதான் இந்தியப்பிரதமர் நரேந்திர மோடிக்கான 13ஐ அமல்படுத்தக் கோரும் ஆவணக் கையளிப்பாகும்.

மின்சாரம் துண்டிக்கப்படுமா, துண்டிக்கப்படாதா என்று தெரியாத நிலையில் இருக்கும் மக்கள் அரசியல்வாதிகளின் இறுமாப்பு மோதல்களுக்குள் சிக்கமாட்டார்கள் என்றாலும், பெருந்தேசியச் சிங்களப் போக்கு இனவாதமானது இலங்கையில் எழுந்தே நிற்கிறது.

இந்த நிலைப்பாட்டுக்கு சிறுபான்மைத் தமிழ் மக்களின் உரிமைப் பிரச்சினை தெரியாத ஒன்றல்ல. தெரிந்தும் தெரியாமலிருக்கின்ற ஒத்துழையாமைதான் காரணம்.

இந்த ஒத்துழையாமையின் பிரதிபலிப்பாக நாட்டில் உருவாகி வருகின்ற வீணான பிரச்சினைகளை ஜனாதிபதி எவ்வாறு சமாளிக்கப் போகிறார் என்பதுதான் மில்லியன் கேள்வி. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கையாளும் வஞ்சகத் தனமான இராஜதந்திர முறைமை, நாட்டில் எந்தவொரு பிரச்சினையும் இல்லை என்கிற மாயத்தனம் ஒத்துழையாமையின் முழு வெளிப்படையாகும். இந்த ஒத்துழையாமையானது இன்னமும் பல தசாப்தங்களுக்கு இலங்கை நாட்டை மீட்கமுடியாத நிலையை நோக்கியே நகர்த்தும்.



## வாழ்வியல் தரிசனம்

அச்சம், பயம், சஞ்சலம் இவையெல்லாம் ஒரே கருத்தாகத் தோன்றலாம். ஆனால், மனம் எப்பொழுதும் குழம்பியப்படியே இருப்பது சஞ்சலம். சில சந்தர்ப்பங்களில் பயம் எவருக்கும் தோன்றலாம். ஆனால், எல்லா விஷயங்களிலும் தன்னை இழந்திருப்பது அச்சத்தின் வெளிப்பாடாகும்.

சில விஷயங்களில் சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளவேண்டும். ஒருவன் குடிபோதையில் கத்தியுடன் தன்பாட்டுக்குச் செல்லும்போது, அவனை மறித்து உபதேசம் செய்தலாகாது. இது வீரச்செயல் அல்ல; வீரத்தை எல்லா நேரங்களிலும் காட்டலாகாது.

சும்மா போனவனைச் சண்டைக்கு இழுத்தலாகாது. அதன் விபரீதம் பெரிதாகலாம். சில சந்தர்ப்பங்களில் கோழையும் வீரனாகின்றான்.

துன்பமான விடயங்களை எதிர்கொண்டவர்கள், அச்சத்தை துச்சமாக்கிவிடுகின்றார்கள். வாழ்க்கையில் துணிவு பிரதானமானது; முன்னேற்றத்தை இது உருவாக்கும்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

வவுனிக்குளத்தின் கீழுள்ள

### வீதிகளையும் பாலங்களையும் புனரமைக்கவும்

முல்லைத்தீவு மாவட்டத்தின் வவுனிக்குளத்தின் கீழுள்ள விவசாய வீதிகள், பாலங்கள் என்பவற்றைப் புனரமைத்துத் தருமாறு விவசாயிகளும் பொதுமக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மிகப்பெரிய நீர் பாசனக் குளமான வவுனிக்குளத்தின் கீழ், தற்போது 6,600 ஏக்கர் வரையான நிலப்பரப்பில், 2,000க்கும் மேற்பட்ட விவசாய குடும்பங்கள், விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன.

இந்த நிலையில், 2012ஆம் ஆண்டு புனரமைப்பு செய்யப்பட்டு, 24 அடியாக காணப்பட்ட நீர் கொள்ளளவு 26 அடியாக உயர்த்தப்பட்டு, நெற்செய்கைக்கு மேலதிகமாக 1,325 ஏக்கர் நிலப்பரப்பில் மேட்டுநிலச் செய்கை மேற்கொள்ளும் வகையில், இடது மற்றும் வலது கரை நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ், 15 கிராமங்களை உள்ளடக்கிய வகையில், 1,375 குடும்பங்கள் நன்மை அடையக் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்த நிலையில், விவசாய நிலங்களுக்கு நீர்ப்பாசனம் செய்யும் நீர் விநியோக வாய்க்கால்கள், விவசாய வீதிகள், பாலங்கள், கழிவு வாய்கள் என்பன புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றன. எனவே இவற்றைப் புனரமைத்துத் தருமாறு, விவசாயிகளும் பொதுமக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

–யது பாஸ்கரன்



FOR IMMEDIATE RELEASE 18 January 2022

Women in Management, IFC மற்றும் அவுஸ்திரேலிய அரசாங்கம் இணைந்து இலங்கை மற்றும் மாலைதீவுகளைச் சேர்ந்த சிறந்த

# 50 நிபுணத்துவ மற்றும் தொழில்நிலை பெண்களுக்கு கௌரவிப்பு




Women in Management (WIM) இனால் IFC மற்றும் அவுஸ்திரேலிய அரசாங்கம் ஆகியன இணைந்து சிறந்த 50 நிபுணத்துவ மற்றும் தொழில்நிலை பெண்கள் விருதுகள் 2021 நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது. இதன் போது இலங்கை மற்றும் மாலைதீவுகளில் தமது துறைகளில் சிறப்பாக செயலாற்றியிருந்த நிபுணத்துவ மற்றும் தொழில்நிலை பெண்கள் கௌரவிக்கப்பட்டிருந்தனர்.

11ஆவது ஆண்டாகவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வின் போது விருந்தோம்பல், வங்கி மற்றும் நிதியியல், சரக்குக் கையாளல், விநியோக சங்கிலிகள், தொழில்முயற்சியாண்மை, ஊடகம் மற்றும் சட்டம் போன்றவற்றுடன், தாம் தெரிவு செய்த தொழில்நிலைகளில் அல்லது தமது சமூகத்தைச் சேர்ந்த பெண்களுக்கு ஊக்குவிப்பாக திகழ்ந்தமைக்காக கௌரவிப்பு வழங்கப்பட்டிருந்தது. இந்த விருதுகள் வழங்கலின் போது, பணியிடங்களில் பெண்களின் வளர்ச்சி மற்றும் அவர்களுக்கு வலுவூட்டல் வழங்கியிருந்த இலங்கையின் நிறுவனங்களின் செயற்பாடுகளும் பாராட்டப்பட்டிருந்தன.

இந்த விருதுகள் வழங்கலின் போது உயர்ந்த விருதுகள் வைத்தியர். மஹேஷி ராமசாமி (ஆண்டின் சிறந்த உத்வேகமான பெண் நிபுணர்), பேராசிரியர். நதீரா கருணாவீர (ஆண்டின் சிறந்த உத்வேகமான பெண்), அருணி குணதிலக (Trail Blazer), ரந்துலா டி சில்வா (ஆண்டின் சிறந்த கேம் சேஞ்ஜர்), கலாநிதி வஜிரா சித்ரசேன (நடுவர்களின் தெரிவு) போன்ற விருதுகள் வழங்கப்பட்டிருந்தன. விருதுகளின் வெற்றியாளர்கள் பற்றிய முழு விவரங்களும் கீழே தரப்பட்டுள்ளன.

Women in Management (WIM) இன் ஸ்தாபகர்/தலைமை அதிகாரி கலாநிதி. சுலோச்சனா செகேரா கருத்துத் தெரிவிக்கையில், "மீட்சி, ஆர்வ மனப்பாங்கு, கடும் உழைப்பு மற்றும் வளர்ச்சி ஆகியவற்றின் கொண்டாட்டமாக 2021 ஆம் ஆண்டின் விருதுகள் வழங்கும் நிகழ்வு அமைந்திருந்தது. தொற்றுப் பரவல் ஆரம்பித்து மூன்றாவது ஆண்டில் நாம் காலடி பதித்துள்ள நிலையில், இன்னல் வேளைகளின் போதும் காணப்படும் வாய்ப்புகள், ஆற்றல்களைப் பற்றி இந்த ஆண்டின் வெற்றியாளர்கள் எமக்கு நினைவூட்டுவதாக அமைந்துள்ளனர். சவால்கள் நிறைந்த காலப்பகுதியில் இலங்கை மற்றும் மாலைதீவுகளைச் சேர்ந்த பெண்கள் கொண்டிருக்கும் ஆற்றல்களைப் பற்றியும் இவர்கள் எமக்கு நினைவூட்டியுள்ளனர். வெளிப்படையில் தமது நிலையை பெற்றுக் கொள்வதில் பெண்கள் பின்நின்றாலும், கடந்த தசாப்த காலப்பகுதியில் சிறந்த 50 பெண் நிபுணர்கள் விருதுகளினூடாக, அவர்களுக்கு தமது திறமைகள் மற்றும் சாதனைகளை வெளிப்படுத்துவதற்கு வாய்ப்புக் கிட்டியிருந்ததுடன், ஏனையவர்கள் மத்தியில் ஆர்வமனப்பாங்களை தோற்றுவிக்கக்கூடியவர்களாகவும் அமைந்திருந்தனர்" என்றார்.

கடந்த காலங்களில் 470க்கும் அதிகமான வெற்றியாளர்களைக் கொண்டுள்ளதுடன், நாட்டின்



நிலைபேறான மற்றும் உள்ளடக்கமான பொருளாதார வளர்ச்சியில் தலைவர்களாக, ஊழியர்களாக, தொழில் முயற்சியாளர்களாக மற்றும் பங்காளர்களாக ஆற்றும் பங்களிப்புகளை கௌரவித்து வெளிக் கொணரும் வகையில் சிறந்த 50 நிபுணத்துவ மற்றும் தொழில்நிலை பெண்கள் விருதுகள் அமைந்துள்ளது.

இந்த நிகழ்வை இணைந்து முன்னெடுப்பதில் IFC ஏழாவது வருடத்தை பூர்த்தி செய்துள்ளதுடன், இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான IFC இன் இடைக்கால முகாமையாளர் விக்டர் அந்தனிபிள்ளை கருத்துத் தெரிவிக்கையில், "பொருளாதாரங்கள் மற்றும் சமூகங்கள் சிறந்த வகையில் கட்டியெழுப்பப்படுவதற்கு நேர்த்தியான சூழலை கட்டியெழுப்ப வேண்டும். IFC-DFAT Women in Work நிகழ்ச்சியினூடாக ஆதரவளிக்கப்பட்டிருந்த இந்த ஆண்டின் சிறந்த 50 விருதுகள் வழங்கலினூடாக தொற்றுப் பரவல் மத்தியில் இலங்கையின் பெண்களின் மீட்சியான தலைமைத்துவ பண்புகளை வெளிப்படுத்துவதாக அமைந்திருந்தது" என்றார்.

இந்த நிகழ்வில் இலங்கை மற்றும் மாலைத்தீவுக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் டேவிட் ஹோலி கருத்துத் தெரிவிக்கையில், "கடந்த காலங்களில் சிறந்த 50 விருதுகள் வழங்கல் என்பதனூடாக, வியாபாரத்திலுள்ள பெண்கள் தமது சக்தியினூடாக தலைமைத்துவத்திலுள்ளவர்களையும் மற்றும் சமூகத்திலுள்ளவர்களினதும் கவனத்தை ஈர்த்து முன்மாதிரியாக திகழ்ந்திருந்தனர். கொவிட்-19 தொற்றுப் பரவல் காணப்படும் காலப்பகுதியில் 2022 விருதுகள் வழங்கலினூடாக இலங்கை பெண்களின் மீண்டெழுந்தன்மைக்கு கௌரவிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது" என்றார்.

சிறந்த 50 நிபுணத்துவ மற்றும் தொழில்நிலை பெண்கள் விருதுகள் 2021 க்கு டயலொக் அனுசரணை வழங்கியிருந்ததுடன், தங்க அனுசரணையாளர்களாக Salota International மற்றும் சிங்கர் இணைந்திருந்தன. வெள்ளி அனுசரணையாளர்களாக லங்கா ஐஓசி, யுனிலீவர், விஷன் கெயார், எயிட்கன் ஸ்பென்ஸ் ஆகியன இணைந்திருந்தன. நிகழ்வின் அனுசரணையாளர்களாக மலிபன், சம்பத் வங்கி ஆகியனவும் இணைந்திருந்தன. நிகழ்வின் அன்பளிப்புப் பங்காளராக New Vivya கைகோர்த்திருந்தது.

ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் சட்டப்பிரிவின் தலைமை அதிகாரியும் செயலாளர் மற்றும் கூட்டாண்மை சமூக பொறுப்புணர்வு செயற்பாடுகளுக்கான தலைமை அதிகாரியும் 2021 ஆம் ஆண்டு விருதுகள் வழங்கலுக்கான நடுவர் குழுவின் தலைவருமான நதீஜா தம்பையா விருதுகளின் வெற்றியாளர்கள் பற்றி கருத்துத் தெரிவிக்கையில், "இந்த ஆண்டு விருதுகளுக்காக விண்ணப்பித்திருந்த பெண்களின் தரம் உண்மையில் உயர்வானதாக அமைந்திருந்தது. இந்தப் பெண்களின் தொழில்நிலைகளில் அவர்கள் அடைந்திருந்த சாதனைகளை மாத்திரம் கவனம் செலுத்தாமல், தொழிற்துறையில் அவர்களின் தாக்கம் மற்றும் தமது நிறுவனங்களில் ஏனைய பெண்களுக்காக எவ்வாறான பங்களிப்புகளை வழங்கியிருந்தனர் என்பது பற்றியும் கவனம் செலுத்துமாறு தூண்டப்பட்டிருந்தோம்" என்றார்.

இந்த ஆண்டின் நடுவர் குழுவின் தலைவராக நதீஜா தம்பையா இயங்கியதுடன், குழுவில் Hayleys Agriculture Holdings Ltd முகாமைத்துவ பணிப்பாளர் ஜயந்தி தர்மசேன, Dreamron Group of Companies குழும முகாமைத்துவ பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான கிஷு கோமஸ், Daily FT பத்திரிகையின் ஸ்தாபக ஆசிரியரும், பிரதம நிறைவேற்று அதிகாரியுமான நிஸ்தார் கசிம், Clootrack இலங்கை/மாலைதீவுகள் மற்றும் பாகிஸ்தான் பிரதம நிறைவேற்று அதிகாரி ரொஹாந்த அதுகோரல, Dialog Axiata PLC இன் குழு பிரதம வாடிக்கையாளர் அதிகாரி சான்ட்ரா டி சொய்ஸா, தந்திரோபாய சந்தைப்படுத்தல் நிபுணர் சந்தியா சல்காடோ, KL.LK பிரதம நிறைவேற்று அதிகாரி சந்தோஷ் மேனன், இலங்கைக்கான இடைக்கால அவுஸ்திரேலிய உயர் ஸ்தானிகர் அமன்டா ஜுவெல், IFC இன் Women in Work இல் நிகழ்ச்சி முகாமையாளர் சாரா ட்விக் ஆகியோர் அடங்கியிருந்தனர்.

## WIM இனைப் பற்றி...

பெண்களின் வெற்றிக்காக அர்ப்பணிக்கப்பட்ட Women in Management (WIM) இலங்கையின் பெண் தொழில் வல்லுநர்களையும் தொழில் முனைவோரையும் ஒரு தனித்துவமான இணைய தளத்தின் மூலம் ஒன்றிணைத்து, அவர்களின் திறமைகளை உலகளாவிய வெற்றிக்கு கொண்டு செல்கிறது. மேலதிக தகவல்களை பின்வரும் தளங்களில் பார்வையிடவும்:

www.womeninmanagementawards.org/
www.womeninmanagement.org/
www.facebook.com/SLWIM/
www.twitter.com/WomeninManageme
www.linkedin.com/in/women-in-management-sri-lanka

## 'சிறந்த 50' தொழில்நிலை மற்றும் நிபுணத்துவ பெண்கள் விருதுகள் 2021 வெற்றியாளர்கள்

| Category | Name | Designation | Organization |
|---|---|---|---|
| *Sri Lanka* | | | |
| மனித வளங்கள் (HR, HRD மற்றும் IR ஆகியவற்றைக் கொண்டது) | தினலி பீரிஸ் | குழும மனித வளங்கள் பணிப்பாளர் | MAS ஹோல்டிங்ஸ், MAS கெப்பிட்டல் பிரைவட் லிமிடெட் பணிப்பாளர் சபை அங்கத்தவர். |
| வங்கியியல் துறை (வங்கியியல் நிபுணர்கள்) | கேசிலா ஜயவர்தன | தலைமை அதிகாரி | தேசிய சேமிப்பு வங்கி |
| நிதிச் சேவைகள் (நிதியியல் நிபுணர்கள், கணக்காய்வாளர்கள், காப்புறுதி சேவைகள், பங்குமுகவர்கள் மற்றும் லீசிங்) | தினலி கட்டிபெஆராச்சி | உப தலைவர் | எயிட்கன் ஸ்பென்ஸ் கோர்பரேட் ஃபினான்ஸ் பிரைவட் லிமிடெட் |
| சந்தைப்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பாடல்கள் (விற்பனைகள், வர்த்தக நாமங்கள், நுகர்வோர் பராமரிப்பு, பொது உறவுகள்) | காவிந்திர ராஜபக்ச | VP/சந்தைப்படுத்தல் தலைமை அதிகாரி | சொஃப்ட்லொஜிக் லைஃவ் இன்சூரன்ஸ் பிஎல்சி |
| சட்டம் | அம்பிகா சற்குணநாதன் | மனித உரிமைகள் சட்டத்தரணி மற்றும் சக ஊழியர் | திறந்த சங்க மையம் |
| அரச மற்றும் பொதுத் துறை | கிரேஸ் ஆசிர்வாதம் | பெல்ஜியம், லக்சம்பேர்க் தூதுவர் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கான தூதுக்குழுவின் தலைமை அதிகாரி | வெளி விவகார அமைச்சு, இலங்கை |
| கூட்டாண்மை தொடர்பாடல் | மனிந்திரி பண்டாரநாயக்க | பிரதம வர்த்தக நாம சந்தைப்படுத்தல் அதிகாரி | ஜனசக்தி குழுமம் |
| டிஜிட்டல் ஊடகம் | தரிந்தி தலாஹிட்டி | பிரதி ஆசிரியர் | Pulse Derana |
| விநியோகத் தொடர் மற்றும் சரக்குக் கையாளல் | தெபோரா திசாநாயக்க | விற்பனைகள் பொது முகாமையாளர் | Expolanka ஃபிரைட் பிரைவட் லிமிடெட் |
| விருந்தோம்பல் துறை (சுற்றுலா, உணவு மற்றும் பானங்கள், பிரயாணம், போக்குவரத்து மற்றும் நிகழ்வுகள், களியாட்டம் மற்றும் கவர்ந்திழுக்கும் பகுதிகள்) | சந்திரா மதநாயக்க | முகாமைத்துவ பணிப்பாளர் | Fab ஃபுட்ஸ் பிரைவட் லிமிடெட் |
| கலை மற்றும் களிப்பூட்டல் தொழிற்துறை | அனோலி பெரேரா | கலைஞர் மற்றும் எழுத்தாளர் | |
| பாதுகாப்புப் படை மற்றும் சிவில் பாதுகாப்பு | எஸ்எஸ்பி ஆர் ஏ. தர்ஷிகா குமாரி | பணிப்பாளர் சிறுவர் மற்றும் பெண்கள் சித்திரவதை தடுப்பு பிரிவு | சிறுவர் மற்றும் பெண்கள் சித்திரவதை தடுப்பு பிரிவு |
| விளையாட்டு | தம்பு நெல்கா ஷிரோமலா | அண்மையில் இடம்பெற்ற டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளில் இலங்கையின் முதலாவது பெண் மத்தியஸ்தர் மற்றும் நடுவர் | |
| கல்வி (கல்வி நிலையங்கள், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் போன்றன) | பேராசிரியர். மங்கலா குணதிலக | உடலியக்கவியல் பிரிவின் இணை பேராசிரியர்/பேராசிரியர், முகாமைத்துவ பணிப்பாளர் | கொழும்பு பல்கலைக்கழக, மருத்துவ பீடம், விலங்கு விஞ்ஞான ஆய்வுகூடங்களின் இலங்கையின் சம்மேளனம் |
| விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி | பேராசிரியர். ஹிரண்யா பீரிஸ் | University College London (UCL) இன் வான்பௌதீகவியல் பேராசிரியர், UCL Cosmoparticle முன்னெடுப்பின் பணிப்பாளர், மற்றும் Oskar Klein Centre இன் பணிப்பாளர் (http://okc.albanova.se/) for Cosmoparticle Physics in Stockholm. | |
| சுகாதாரம் மற்றும் மருத்துவத் துறை | வைத்தியர். பத்மா ஸ்ரீயானி குணரட்ன | தலைவர் | இலங்கை மருத்துவ சங்கம் |
| ஆண்டின் கூட்டாண்மை தலைமைத்துவம் | வித்யா சிவராஜா | முகாமைத்துவ பணிப்பாளர் | ஃபொன்டெரா ஸ்ரீ லங்கா அன்ட் இந்தியா |
| ஆண்டின் சிறந்த பெண் பணிப்பாளர் சபை அங்கத்தவர் | துஷாரா விஜேவர்தன | நிறைவேற்று அதிகாரமற்ற சுயாதீன பணிப்பாளர் | கொமர்ஷல் பாங்க் ஓஃவ் சிலோன் பிஎல்சி |
| ஆண்டின் சிறந்த தொழில்நிலை முன்மாதிரியாளர் | திலங்கா அபேவர்தன | CMO Lead தெற்காசிய புதிய சந்தைகள் | மைக்குரோசொஃப்ட் ஸ்ரீ லங்கா |
| ஆண்டின் சிறந்த வியாபார முன்மாதிரியாளர் | பசீலா தர்மரட்ன | உரிமையாளர் | CeeBees முன்பள்ளி மற்றும் சிறுவர் பராமரிப்பு நிலையம் |
| மாற்றத்துக்கான ஆண் சம்பியன் | அஜய் அமலீன் | இணை ஸ்தாபகர் / தவிசாளர் | MAS ஹோல்டிங்ஸ் |
| ஆண்டின் சிறந்த சமூக மாற்றத்தை மேற்கொண்டவர் | தேவதர்மினி செல்விகா சஹாதேவன் | நிறைவேற்று பணிப்பாளர் | யுனைட்டட் ஹியுமனிட்டி |
| ஆண்டின் சிறந்த உத்வேகமான பெண் நிபுணர் | வைத்தியர். மஹேஷி ராமசாமி | மருத்துவம் | பிரித்தானிய-இலங்கை வைத்திய அதிகார மற்றும் விரிவுரையாளர். இவர் தற்போது ஒக்ஸ்பேர்ட் தடுப்பூசி குழுமத்தின் பிரதம ஆய்வாளர்களில் ஒருவராக பணியாற்றுகின்றார் |
| ஆண்டின் சிறந்த உத்வேகமான பெண் | பேராசிரியர். நதீரா கருணாவீர | ஒட்டுண்ணியியல் சிரேஷ்ட பேராசிரியர் | கொழும்பு பல்கலைக்கழகம், மருத்துவ பீடம் |
| Trail Blazer | அருணி குணதிலக | தலைமை அதிகாரி | HNB வங்கி |
| ஆண்டின் சிறந்த கேம் சேஞ்ஜர் | ரந்துலா டி சில்வா | ஸ்தாபக பிரதம நிறைவேற்று அதிகாரி | GLX (Good Life X) |
| நடுவர்கள் விருது | கலாநிதி. வஜிரா சித்ரசேன | இலங்கையின் மூத்த பாரம்பரிய நாட்டிய கலைஞர் மற்றும் ஆசிரியர் | |
| அச்சு ஊடகம் | சாந்தனி கிரிந்தி | சிரேஷ்ட ஊடகவியலாளர் | விஜய நியுஸ்பேப்பர்ஸ் லிமிடெட் |
| இலத்திரனியல் ஊடகம் | சேத்தனா லியனகே | சட்டன அரசியல் நிகழ்ச்சி தொகுப்பாளர் | சிரச மஹாராஜா குழுமம் |
| தொழில்நிலை சாதனையாளர்கள் | ஷானி கல்யானிரட்ன கருணாரட்ன | லெபனானின் இலங்கை தூதரகம் - தூதுவர் | லெபனான் தூதரகம் |
| | தேவிகா எல்லேபொல | விற்பனை முகாமையாளர் வணிக செயற்பாடுகள், இலங்கை | எமிரேட்ஸ் விமானசேவை |
| | தர்ஷிகா ஜயசேகர | செயற்திட்ட பணிப்பாளர் களனி புதிய பால நிர்மாணத்தின் செயற்திட்ட பணிப்பாளர் | |
| | சுமையா மக்கான் மார்கார் | பிரதம சட்ட, ஒழுக்க மற்றும் அந்தரங்க அதிகாரி | அலியான்ஸ் இன்சூரன்ஸ் லங்கா லமிடெட் |
| உள்நாட்டு சர்வதேசம் (உள்நாட்டைச் சேர்ந்த வெளிநாட்டு வர்த்தகத்தை முன்னெடுப்பதில் சிறப்பாக செயலாற்றியவர்) | சுஹன்யா ரஃபல் | அருங்காட்சியக பணிப்பாளர் | M+, ஹொங் கொங். |
| பெண்களுக்கு வலுவூட்டும் வகையில் முன்னெடுக்கப்பட்ட நேர்த்தியான ஊடக பிரச்சாரத் திட்டம் | NDB/சிரச | "ஸ்ரீ லங்கா வனிதாபிமான" | |
| சிறந்த பெண்கள் வலுவூட்டல்களை மேற்கொள்ளும் அரச சார்பற்ற நிறுவனம் / சர்வதேச அரச சார்பற்ற நிறுவனம் அல்லது சம்மேளனம் | SOS சிறுவர் கிராமங்கள் இலங்கை | | |
| சிறந்த நிறுவனசார் கலாசார விருது (பாலின சமத்துவம், உள்ளடக்கமான மற்றும் நன்மதிப்புள்ள பணியிடம்) | AIA இன்ஷூரன்ஸ் லங்கா லிமிடெட் | | |
| பெண்கள் வலுவூட்டலில் நிறுவனமொன்றினால் முன்னெடுக்கப்பட்ட சிறந்த ESG செயற்திட்டம் | Hirdaramani அப்பரல் | WOW - The Wonders of Wellbeing நிகழ்ச்சி | |
| பண்புகள் மற்றும் திறன்களுடனான உத்வேகமான பெண் | அசந்தி ருவன்மலி டி சில்வா | கவிதை, பாடல், குறுங்கதை, புதுக்கதை மற்றும் அறிவிப்புத் துறையில் சிறப்பாக செயலாற்றும் கலைஞர் என்பதுடன் கஷ்டப்பட்டு வாழ்க்கையில் முன்னேறிய நபராவார் | பார்வை குன்றியவர் |
| ஆண்டின் சிறந்த உத்வேகமான இளம் தொழில் முயற்சியாளர் | ஹர்ஷி மனமேந்திர | ஸ்தாபக பணிப்பாளர் | இஷாரா வென்ச்சர்ஸ் பிரைவட் லிமிடெட் |
| சிறந்த பெண் தொழில் முயற்சியாளர் (பாரிய) | ஷிஆ விக்ரமசிங்க | குழும முகாமைத்துவ பணிப்பாளர் | சிலோன் பிஸ்கட்ஸ் லிமிடெட் |
| சிறந்த பெண் தொழில் முயற்சியாளர் (சிறிய) | கிரித்திகா துஷ்யந்த | முகாமைத்துவ பணிப்பாளர் | டெக்னோ பிரைன் இன்டர்நஷனல் பிரைவட் லிமிடெட் |
| சிறந்த பெண் தொழில் முயற்சியாளர் (சிறிய) | அதிஷா தஹநாயக்க | ஸ்தாபக பணிப்பாளர் | டபிள் XL பிரைவட் லிமிடெட் |
| வளர்ந்து வரும் பெண் தொழில் முயற்சியாளர் (5 விருதுகள்) வடக்கு, கிழக்கு, தெற்கு, மேல், மத்திய | நயனதாரா விமலகுண கொடிதுவக்கு | உரிமையாளர் | தாரா வோட்டர்கேட் ஹோட்டல் |
| வளர்ந்து வரும் பெண் தொழில் முயற்சியாளர் (5 விருதுகள்) வடக்கு, கிழக்கு, தெற்கு, மேல், மத்திய | புலானி ரணசிங்க | ஸ்தாபகர்/பிரதம நிறைவேற்று அதிகாரி | லூான்ஸ் லெப் பிரைவட் லிமிடெட் |
| ஆண்டின் சிறந்த சமூக தொழில்முயற்சியாளர் | ருச்சினி லியனகே | முகாமைத்துவ பணிப்பாளினி | சுனிதியல்ஸ் |
| வளர்ந்து வரும் பெண் தொழில் முயற்சியாளர் (5 விருதுகள்) வடக்கு, கிழக்கு, தெற்கு, மேல், மத்திய | சாந்தினி அஹங்கம | ஸ்தாபகர்/பிரதம நிறைவேற்று அதிகாரி | கொகனட் மிரகிள் பிரைவட் லிமிடெட் |
| வளர்ந்து வரும் பெண் தொழில் முயற்சியாளர் (5 விருதுகள்) வடக்கு, கிழக்கு, தெற்கு, மேல், மத்திய | டி எம் பொடிமெனிகே | உரிமையாளர் | பாக்யா பான் புரொடக்ட்ஷன் பொலன்னறுவை |
| வளர்ந்து வரும் பெண் தொழில் முயற்சியாளர் (5 விருதுகள்) வடக்கு, கிழக்கு, தெற்கு, மேல், மத்திய | ஜி. சிவஜோதி | உரிமையாளர் | லக்ஷ்மி பு ரொடக்ட் - கல்முனை |
| *மாலைதீவுகள்* | | | |
| ஆண்டின் சிறந்த நிபுணத்துவ முன்மாதிரியானவர் | உசா ஆயிஷா சுஜுன் முஹம்மட் | உயர் நீதிமன்றம் | உச்ச நீதிமன்றம் |
| ஆண்டின் சிறந்த தொழில்நிலை சாதனையாளர் | அய்ஷத் ஜெனிபர் | ஐலன்ட் ஏவியேஷன் சேர்விசஸ் லிமிடெட் | பிரதி முகாமைத்துவ பணிப்பாளர் |
| நோக்கத்தைக் கொண்ட பெண் | வைத்தியர். பாத்திமா நஸ்லா ரஃபீக் | சுகாதார பாதுகாப்பு முகவரமைப்பு | மருத்துவ அதிகாரி (தலைமை அதிகாரி, தொற்று நோய் கட்டுப்பாட்டு பிரிவு) |
| ஆண்டின் சிறந்த உத்வேகமான பெண் | மைமூனா அபூபகுரு | சுகாதார பாதுகாப்பு முகவரமைப்பு | பணிப்பாளர் நாயகம் |
| காலநிலை செயற்பாடு விருது | அயிஷத் ஹுதா அஹமட் | சுயாதீன சூழல் ஆலோசகர் | |
| ஆண்டின் சிறந்த தொழில் முயற்சியாளர் | அபிதா இஸ்மைல் அலி | ஆடை வடிவமைப்பாளர் | |



# பரதநாட்டியம்

தைப்பூச நாட்டிய உற்சவத்தை முன்னிட்டு நுவரெலியா ஆவேலியா ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய மண்டபத்தில், பரதநாட்டிய நிகழ்வுகள் செவ்வாய்க்கிழமை (18) மாலை நடைபெற்றன.

நுவரெலியா ஸ்ரீ ஓம்கார கலை மன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு, நுண்கலைமாணி தனபாலசிங்கம் சசிகரனின் மாணவர்களின் நடன நிகழ்வுக்கு மஹரகம தேசிய கல்வி நிறுவகத்தின் விரிவுரையாளர் கலாநிதி ராகினி திருகுமரன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

சிறப்பு அதிதிகளாக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையின் சுவாச நோய்ப்பிரிவின் விசேட வைத்திய நிபுணர் சதுர வீரசிங்க, நுவரெலியா பொலிஸ் சுற்றுலா பிரிவு பொறுப்பதிகாரி நிஷாந்த பிரதீப் குமார ஆகியோர் கலந்துக்கொண்டனர்.

நடனம் அமைப்பு:- நுண்கலைமாணி தனபாலசிங்கம் சசிகரன்

குரலிசை:- கொழும்பு வலய ஆசிரியர் ஆலோசகர் கலைசுடர் வைத்திலிங்கம் கணேசலிங்கம் சங்கீத கலாவித்தகர், பண்ணிசைபாவர்:-திருமந்திரசெல்வர்,

வயலின்:- வயலின் வித்துவான் வித்வ கலாபூசஷணம் கலாநிதி சிவஸ்ரீ வெங்கடசுப்பிரமணிய சர்மா,

மிருதங்கம் :- மிருதங்க கலாவித்தகர் கந்தசாமி நந்தகுமார்,

புல்லாங்குழல் :- நுண்கலையியல் நிறைஞர்

க . சிவபாலரட்ணம் ஆகியோர் இசை வழங்கினார்.

(படங்களும் தகவல்களும்: டி. ஷங்கீதன்)































# அழிவின் விளிம்பில் சைவத் தமிழ் பண்பாடு

**க.மதனராஜ்**
ஊடகக் கற்கைகள் துறை
நான்காம் வருடம்
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.



சுவர்ணா கௌரிபாலா

'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்' என்ற மகாகவி பாரதியின் வரிகளுக்கு அமைய உலகத்தின் செம்மொழிகளில் ஒன்றாக தமிழ்மொழி மிளிர்கின்றது. தமிழும், சமஸ்கிருதமுமே சைவ சமயத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்துவந்த மொழிகள் ஆகின்றன. தமிழும் வடமொழியும் கிறிஸ்துக்கு முன் 5,000 ஆண்டுகளுக்கு முற்பட்டவை என தமிழ் ஆராய்ச்சி அறிஞர் க. வெள்ளைவாரணனார் தெரிவித்துள்ளார்.

'மன்னுமா நெல்லை மகேந்திர மதனிற்

சொன்ன வாகமந் தோற்று வித்தருளியும்'

என்னும் திருவாசக வரிகள் மூலம் தமிழ் மொழியின் இலக்கணத்தை சிவபெருமான் முதன்முதலில் அகத்திய மாமுனிவருக்கு உபதேசித்தார் என்பதும் வரலாறு.

இவ்வாறான பிணைப்பை கொண்ட தமிழ் மொழியும் சைவ சமயமும் தமிழ் மக்களின் குறிப்பாக இலங்கையின் வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் இரு தூண்களாக இருந்து வருகின்றன. யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில் புலம்பெயர் தேசத்தை நோக்கி படையெடுக்கும் தமிழ் மக்களின் வீதம் என்பது கணிசமாக அதிகரித்துள்ளது. இவ்வாறான படையெடுப்பின் விளைவாக அந்நியக் கலாசாரம், அந்நிய மொழியின் செல்வாக்கு வடக்கு, கிழக்கு மக்கள் மத்தியிலும், புலம்பெயர் தேசம் வாழ் தமிழ் மக்களிடையேயும் செல்வாக்கு செலுத்த ஆரம்பித்துள்ளமை எம் பாரம்பரியத்தின் அழிவுப்பாதையையே காட்டி நிற்கின்றது.

தமிழைப் போற்றி, தமிழ் வழியில் சைவ சமயத்தைப் பரப்பச் செய்த சான்றோர்களால் செந்தமிழும் வளர்ந்தது; சைவ நெறியும் வளர்ந்தது. அதற்கு எதிர்மாறாக, இன்றைய தமிழ் சமுதாயம் சைவ சமயக் கலாசாரத்தைப் பின்பற்றுவதையும் உலகத்தின் மூத்த மொழிகளில் ஒன்றான தமிழ் மொழியை பேசுவதைக் கௌரவக் குறைவாக எண்ணுகின்ற போக்கையும் காணுகின்றபோது வெட்கித் தலைகுனிய வேண்டியவர்களாக நிற்கின்றோம்.

தமிழ் மொழியின் அழகும் செம்மையும் புரியாதவர்கள் தமிழைக் காட்டிலும் ஆங்கிலம் பேசுவதே கௌரவம் என நினைத்து வரட்டுக் கௌரவத்துடன் வாழும் போக்கே தற்காலத்தில் அதிகமானோரிடம் காணமுடிகின்றது.

இவ்வாறான ஒரு கால ஓட்டத்தில், புலம்பெயர் தேசத்தில் வசிக்கும் சுவர்ணா கௌரிபாலா, தமிழையும் சைவத்தையும் புலம்பெயர்வாழ் தமிழ் மக்களிடையே நிலைநாட்ட தனி ஒருவராக பல முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார் அவருடனான நேர்காணலின் போது அவர் தெரிவித்ததாவது:

**கேள்வி: முதலில் உங்களைப் பற்றிய அறிமுகத்தை எமக்கு வழங்குங்கள்?**

பதில்: இலங்கையில் தென்மராட்சி பிரதேசத்தில் கொடிகாமம் எனும் ஊரில் பிறந்த நான், சமூக விஞ்ஞான ஆசிரியராகக் கடமையாற்றியிருந்தேன். திருமணத்திற்காக தாய்நாட்டைவிட்டுப் பிரித்தானியா சென்றேன். அந்நிய நாட்டிற்குச் சென்ற பின்னர்தான் தாய்நாட்டின் அருமையும் தாய்மொழியின் பெருமையும் சைவத்தின் மகிமையும் எமது பாரம்பரியங்களின் அர்த்தங்களையும் உணர்ந்தேன். அதன் வெளிப்பாடே எனது எழுத்துகள்.

**கேள்வி: இலங்கையிலிருந்து புலம் பெயர் தேசத்திற்கு சென்று வசிக்கும் உங்களுக்கு கவிதை மூலமாகவும் எழுத்துகள் மூலமாகவும் தமிழ் மொழி மற்றும் சைவ பாரம்பரியத்தை பாதுகாக்க வேண்டும் என்ற ஆர்வம் எவ்வாறு உங்களிடம் தோன்றியது?**


பதில்: முதலில் எனது நாட்டில் தமிழையும் சைவத்தையும் விலகிச்செல்லாது உறுதியாகப் பிடித்து வைத்திருந்தால் புலம்பெயர் நாட்டில் தமிழை வளர்க்க வேண்டிய அவசியம் இருக்காது; அது அவசியமும் இல்லை. ஏனென்றால் தாய்நாட்டையும் தாய்மொழியையும் நேசிப்பவன் நிச்சயமாகப் புலம்பெயரமாட்டான். என்னையும் சேர்த்துத்தான் சொல்கிறேன். எனது கணவர் எனக்கு முதலே கவிதை எழுதிக்கொண்டிருந்தார். அதனால் கவி உலகில் எனக்கு ஆர்வம் ஏற்பட்டது. அதனால்தான் எனது ஆதங்கத்தை எழுத்து மூலம் வெளிப்படுத்துகிறேன்.

**கேள்வி: இதுவரை காலமும் எவ்வாறான படைப்புகளை நீங்கள் படைத்துள்ளீர்கள்?**

பதில்: நான் இந்த நாட்டில் ஆறு வருடமாக வசிக்கிறேன். என் எழுத்துப் பயணம் இரண்டு வருடங்களைக் கடக்கவில்லை. எழுத்துலகிற்கு நான் ஒரு தவழும் குழந்தை. நான் விரும்பிப் படைத்தவற்றில் இலக்கியம், வரலாறு, இயற்கை, சமூகம் பற்றியவையே அதிகம்.

**கேள்வி: அறுபத்தி மூன்று நாயன்மார்களின் வரலாற்றை கவிதையாகப் படைக்கும் முயற்சியை மேற்கொண்டு, தற்போது பல நாயன்மார்களின் வரலாற்றை கவிதையாக படைத்துள்ளீர்கள். இந்த முயற்சி உங்களிடம் உருவாக காரணம் என்ன?**

பதில்: சைவத்தையும் தமிழையும் முழுதாக அறிந்துகொள்வதற்கு இந்த ஒரு பிறப்பு போதாது. தமிழில் உள்ளதுபோல், வேறு எந்த மொழியிலும் இவ்வளவு தொகையான நூல்கள் இல்லை. ஆனால், எமது நூல்களின் பெறுமதி எமக்குத் தெரிவதில்லை. சைவத்தின் பெருமையை இன்றைய தலைமுறையினர் இலகுவாகப் படிப்பதற்கு ஏற்றவாறு இலகு நடையில் சுருக்கமாக பெரிய புராணத்தை வழங்கவேண்டும் என்ற அவாவில் இம்முயற்சியை ஆரம்பித்தேன். முகநூலில் பதிவிட்டபோது அதற்கு ஏற்பட்ட வரவேற்பு எனக்கு நல்ல உற்சாகத்தைத் தந்தது. விரைவில் நூல்வடிவில் காண்பீர்கள்.




**கேள்வி: ஔவை என்ற புனைபெயரில் உங்கள் படைப்புகளை வெளிக்கொணர்வதன் காரணம் என்ன?**

பதில்: ஔவையாரை எனக்கு மிகவும் பிடிக்கும். அதனால் முதன்முதலில் கவிதை எழுதும்போது 'ஔவை' என்ற பெயரில் எழுதினேன். இந்தப் பெயரை வைப்பதற்கு எனக்குத் தகுதியுண்டா என்று சிந்தித்ததுண்டு. அப்போது எனது கவிதைகளுக்கு இவ்வளவு வரவேற்புக் கிடைக்கும் என்றெல்லாம் நினைக்கவில்லை. ஒருவேளை ஔவைப் பாட்டியின் ஆசீர்வாதமாகக் கூட இருக்கலாம்.

**கேள்வி: உங்கள் படைப்புகளுக்கு கிடைத்த அங்கிகாரமாக இதுவரை நீங்கள் பாராட்டுகள், விருதுகள் பலவற்றையும் பெற்றிருக்கிறீர்கள். அவற்றைப் பற்றிக் கூற முடியுமா?**

பதில்: எனது முதல் கவிதை இணையத்தொலைக்காட்சி ஒன்றில் இடம்பெற்றது. அதன்தொகுப்பாளர் கவிஞர் ப.வை.ஜெயபாலனின் வற்புறுத்தலால் அதை எழுதினேன். தொடர்ந்து பாமுகம் தொலைக்காட்சியில் எழுதிய கவிதைகள் 20 கவிஞர்களுடன் இணைந்து பாமுகப் பூக்கள் எனும் நூலாக வெளியிடப்பட்டுள்ளது. மற்றும், இணையவழிக் குழுமங்களின் ஆண்டுவிழா மலர்களில் உதிரிகளாக வந்துள்ளன. சான்றிதழ்கள் விருதுகள் நிறைய உண்டு. ஆனாலும் எனது நாட்டில் எனக்குக் கிடைக்கும் பாராட்டு மிகுந்த மகிழ்ச்சியையையும் உத்வேகத்தையும் தருகிறது.

**கேள்வி: புலம்பெயர் தேசத்தில் வசிக்கும் நீங்கள் தமிழையும் சைவத்தையும் வளர்க்க தனியாக முயற்சி மேற்கொண்டு இருக்கின்றீர்கள். இந்த முயற்சியில் நீங்கள் எதிர்கொள்கின்ற சவால்கள் மற்றும், இந்த முயற்சி எவ்வளவு தூரம் தமிழ் மக்கள் மத்தியில் செல்வாக்கு பெற்று இருக்கின்றது என்பது பற்றி கூற முடியுமா ?**

பதில்: தமிழை வளர்த்தல் என்பது மிகப்பெரிய பணி. எனது முயற்சி ஒரு சிறிய செயல் மட்டுமே. தமிழை வளர்த்தல் என்பது பெரிய வார்த்தை. தமிழ்மீது எனக்குள்ள பற்றின் வெளிப்பாடு என்றுதான் இதை சொல்லமுடியும். தமிழை நேசிப்பவர்கள் இரசிப்பார்கள்; பாராட்டுவார்கள்; மற்றவர்கள் கடந்துபோவார்கள்.

ஏனென்றால், தமிழ் பேசுவதையே தகுதிக்குறைவாக நினைக்கிறார்கள். தமிழர் பண்பாட்டைத் தரக்குறைவாக நினைக்கிறார்கள். எமது பெருமைகளை அறியாமையே இதற்குக் காரணம்.

இன்றைய தலைமுறையினருக்கு தமிழின் பெருமையையும் தமிழரின் பண்பாட்டு வடிவங்களையும் புகட்ட வேண்டியது நம் ஒவ்வொருவருடைய கடமையாகும்.